விஶேஷார்த்தங்களை ப்ரஸாதித்தருளவேணும் என்று ப்ரார்த்திக்க, தேஶிகனும் அவனுடைய சித்த ஶுத்தியையும் அறிந்து ஹிதோபதேஶமாக ஸுபாஷித நீவியையும், தத்வ ஸந்தேஶத்தையும், ரஹஸ்ய ஸந்தேஶத்தையும், ரஹஸ்ய ஸந்தேஶ விவரணத்தையும் செய்தருளி அவைகளை ப்ரஸாதித்து,

"ஸத்வஸ்தாந் நிப்ருதம் ப்ரஸாதய ஸதாம்
வ்ருத்திம் வ்யவஸ்தாபய
த்ரஸ்யப்ரஹ்மவிதாகஸாஸ் த்ருணமிவ
த்ரைவர்கிகாந் பாவய |
நித்யே ஶேஷிணி நிக்ஷிபந் நிஜபரம்
ஸர்வம் ஸஹே ஶ்ரீஶகே
தர்மம் தாரய சாதகஸ்ய குஶலீந்
தாராதரைகாந்திந: ||"

என்று நியமித்தருளி அனுப்பிக்க, ஸர்வஜ்ஞ சிங்கப்ப நாயகனும் ஸமஸ்த பிருதுகளோடே எதிர்கொண்டு ஶ்ரீமுகத்தை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு பாரமைகாந்த்ய நிஷ்டனாய் க்ருதக்ருத்யனாய் தேஶிகன் திருவடிகளிலே நித்யபக்தனாயிருந்தான்.

இப்படிக்கொத்த தேஶிகன் விஷயத்தில் நயினார் முதலானார் பண்ணின [1]அதிக்ஷேபாதிகளை,

"ஸர்வதந்த்ர தூர்வஹஸ்ய வேங்கடேஶதீமத:
குர்வதேவமாநநாந் து கேசநாதுரோத்பவா: |
ஹந்த ஹந்த ராமக்ருஷ்ண தூஷணபிதாயிநாம்
கிந்நு சித்ர மத்ர சைத்ய ராவணாநுஸாரிணாம் ||"

என்று ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனும் அருளிச் செய்தார்.

## தேசிகன் நயினாராசார்யர் வைபவங்கள்

ஶ்ராவணே மாஸி ரோஹிண்யாம் ஜாதம் வேங்கடதேஶிகாத் |
விஶ்வாமித்ராந்வயாப்தீந்தும் வரதார்ய மஹம் பஜே ||

இப்படி ஆஸேதுஹிமாசலம் ப்ரஸித்தராய் பகவத் பாகவதாசார்ய பரிபூர்ண கடாக்ஷ பாத்ரராயிருக்கிற வேதாந்த தேஶிகனுக்குப் பேரருளாளர் உமக்கு நம்முடைய அம்ஶமாய் ஒரு புத்ரருண்டா

1. அவமதிப்புகளை.

வர். அவருக்கு நம்முடைய திருநாமத்தைச்சாற்றும் என்றும், "தர்ம ப்ரஜார்தம் வ்ருணீமஹே" என்று வரித்தத்தை ஸபலமாக்கக்கடவீர் என்றும் ஸ்வப்நம் காட்டியருள, தேசிகனும் தம் திருவுள்ளத்திற் கநுகுணமாயில்லாத பத்நியை த்யஜித்து ஸந்ந்யஸித்தருளின உடையவர் போலன்றிக்கே தமக்கு ஸமாநாத்மகுண [1]பௌஷ்கல்ய முடையதர்ம பத்நியினிடத்திலும் முப்பத்திரண்டு ஸம்வத்ஸரம் [2]விஷய விரக்தரா யிருக்கையாலே பின்பு பேரருளாளர் நியமநப்படிக்கு ஒரு சுபதிநத்தில் நிஷேகம் செய்தருள, தேசிகன் தேவிகளும் அன்றுமுதல் கர்பத்தைத் தரித்துக் கொண்டிருக்க, கலி நாலாயிரத்து நானூற்றுப் பதினெட்டாவதான நளவர்ஷத்தில் ஆவணி மாஸத்தில் ரோஹிணீ நக்ஷத்ரத்தில் ஒரு குமாரரவதரிக்க, அவருக்குத் தேசிகனும் ஜாதகர்மம் பண்ணி வரதனென்று திருநாமம் சார்றியருளி அக்ஷராரம்பம் முதலாக வேத வேதாங்கங்களோடே திருமந்த்ர மந்த்ரார்த்தங்களையும் ஸகல சாஸ்த்ரங்களையும் தாமே ப்ரஸாதித்தருள, அந்த வரதாசார்யரும் பேரருளாளர் அம்சமாகையாலே "பிதுஶ்ஶதகுணம் புத்ர:" என்னும்படி அதிமேதாவியாயும் [3]ஸாராம்சவேதநத்தில் அதி நிபுணராயுமிருந்துகொண்டு ஸமஸ்த விசேஷார்த்தங்களையும் பெற்றுக் கலியுகத்தில், நாலாயிரத்து நானூற்று முப்பதாவதான விடவ வர்ஷம் சித்திரை மாஸம் புநர்வஸு நக்ஷத்ரத்தில் ஸ்ரீபாஷ்யத்தை அதிகரிக்கும்போது, முன்பு பேரருளாள ஜீயர் விண்ணப்பஞ் செய்த "நம: பதமிதம் பூயாத்" என்கிற தனியனோடே தாமும்,

"ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்கிககேஸரீ |
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||"

என்று ஒரு தனியனை விண்ணப்பஞ் செய்து சேர்த்து அநுஸந்திக்க, அத்தை ஸுதர்சந பட்டர் முதலான பெரியோர்கள் இனி இத்தனியனையே அநுஸந்தித்து விசேஷார்த்தங்களைக்கேட்கவேண்டும் என்று நியமித்தருள, தேசிகனும் இது பேரருளாளன் நியமந விசேஷமன்றோ? என்று ஸுதர்சநபட்டர் நியமநத்தையும் வரதாசார்யரையும் போர உகந்தருள, இத்தைக் கண்டு பேரருளான ஜீயர் முதலான முதலிகளும் கூரத்தாழ்வான் முதலானோர் உடையவருக்கு

1. நிறைவு 2. உலகப் பற்றில்லாதவராய் 3. ஸாராம்சத்தை அறிதலில்.

ஜ்ஞான புத்ரரான திருக்குருகைப் பிரான் பிள்ளானிடத்தில் போலே ஔரஸ புத்ரரான வரதாசார்யரிடத்தில் அதிப்ரவணராயிருந் தார்கள்.

பின்பு ஒருகால் தேஶிகனும் தம் திருமாளிகை வாசலில் க்ரந் தாவலோகநம் பண்ணிக்கொண்டிருக்க, கந்தாடை லக்ஷ்மணாசார் யரும் பஹு ஶிஷ்யர்களுடனே தேஶிகன் எழுந்தருளியிருக்கிற திருவீதி வழியாக எழுந்தருள, க்ரந்தாவலோகந த்வரையாலே தேஶிகனும் பாராமலிருக்க, அவர் ஶிஷ்யர்களான சாற்றுத வைஷ்ணவர்கள் தேஶிகன் திருவடிகளைப் பிடித்து இழுத்து விட, தேஶிகனும்

"க்நந்தம் ஶபந்தம் பருஷம் வதந்தம்
யோ ப்ராஹ்மணம் ந ப்ரணமேத் யதாவத் |
ஸ பாபக்ருத் ப்ரஹ்ம தவாக்நிதக்தோ
வத்யஶ்ச தண்ட்யஶ்ச ந சாஸ்மதீய: ||"

என்கிற பகவத் வாக்யத்தை நினைத்து அருகே இருந்த எம்பார் திரு மாளிகையைக் கடந்து எழுந்தருளுகிற கந்தாடை லக்ஷ்மணாசார் யரை, அஜ்ஞாநத்தால் வந்த அடியேன் அபராதத்தை க்ஷமித்தருள வேணும் என்று தண்டன் ஸமர்ப்பித்து [1]நிரபராதியை இப்படிக்குச் செய்யலாமோ? என்று வந்த அஹந்தையைக் குறித்து,

"அஹந்தேநாஹந்தே விஹரணபதம் தேஶிககிரஸ்
ஜிவதந்தேநஸ் ஸ்வாந்தே ஸபதி கத ஸந்தேஹவிஷயா: |
அநாயாஸாயாஸாமஹிபதி ஶயாஸா பகவதீ
தராதாரா தாராதர நிகர ஸாதாரணருசி: ||"

என்று தந்திருவுள்ளத்தைப் பார்த்து அருளிச்செய்து, முன்பு பட்டர் முனிந்து கோயிலை விட்டுத் திருக்கோட்டியூரில் எழுந்தருளினாற் போலே, தேஶிகனும் ஸகுடும்பமாக முதலிகளுடனே கோயிலினின் றும் புறப்பட்டு மேனாட்டிலே முன்பு உடையவர் திருநாராயண புரத்தை ப்ரதிஷ்டிப்பிக்கைக்காக எழுந்தருளினாற் போலே, ஒரு விஶேஷத்தை உண்டாக்குகைக்காக அந்தத் திருநாராயணனைச் செல்வப்பிள்ளையோடே கண்டு திருவடி தொழப் போவதாக எழுந்

1. குற்றமற்றவனை.

தருளி, ஸத்யமங்கலத்தில் நித்யவாஸம் பண்ணிக் கொண்டு, அவ்வூர் திருக்காவேரிக் கரையில் எழுந்தருளியிருக்கிற வரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் முதலிகளுக்கு ஸ்ரீ பாஷ்யாதிகளை ப்ரஸாதித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

கந்தாடை லக்ஷ்மணாசார்யரும் தம் ஶிஷ்யர்களாலே பரிபவப்பட்ட தேஶிகன் தன்னை க்ஷாமணம் பண்ணிக் கொண்டது முதலானவைகளை அறியாமலாமலே சில நாள் கழிந்தவாறே தந்திருமேனியில் வைவர்ண்யம் பிறந்து புத்ரோத்பத்தி இல்லாமலிருக்க, அவர் தேவிகள் "இந்தத் திருமேனியில் வைவர்ண்யம் வரும்படி பாகவதாபசாரம் புகுந்ததோ?" என்று கேட்க, அவரும் "ஒன்றும் அறியேன்" என்று சொல்ல, 'ஶிஷ்யர்களாலே வந்ததோ?" என்று விசாரிக்க, அவர்களும் "நம்மாசார்யர் பக்கல் [1]ப்ரத்யுத்தாநாதிகளைப் பண்ணாமலிருந்த தேஶிகனுக்குப் பரிபவம் பண்ணினோம்" என்ன, ஆத்மாபஹாரமுடைமமான அந்த வார்த்தையைக் கேட்டுத் தம்பதிகள் இருவரும் மூர்ச்சித்துத் தாங்களே தெளிந்து "இதுமூலமாகத் தேஶிகன் மேனுட்டுக் கெழுந்தருளினார்" என்று கேட்டு அத்யந்த [2]மநுதப்தர்களாய் ஸத்யமங்கலத்தைச் சென்று தேஶிகனை முதலிகளோடே கண்டு பரவஶர்களாய்த் தண்டன் ஸமர்ப்பித்து,

"அக்ருத ஸுக்ருதகஸ் ஸுதுஷ்க்ருத்தர:
ஶுபகுண லவலேஶ தேஶாதிக: |
அஶுபகுண பரஸ் ஸஹஸ்ராவ்ருத:
வரதமுருதயங் கதிந் த்வாம் வ்ருணே ||"

என்று ஶரணமடைந்து நிற்க, தேஶிகனும் இதென்ன? என்று கேட்க, லக்ஷ்மணாசார்யரும் இந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்து ஒரு ஸம்வத்ஸரம் நித்யமாகத் தேஶிகன் ஸ்ரீபாத தீர்த்தத்தை ஸ்வீகரித்துக் கொண்டிருக்க, தீர்த்த வைபவத்தாலே தந்திருமேனி வைவர்ண்யமும் தீர்ந்து தேவிகளும் கர்ப்பம் தரிக்க, தம்பதிகளிருவரும் ஸந்துஷ்டர்களாய்க் கோயிலேற வெழுந்தருள வேணும் என்று ப்ரார்த்திக்க, தேஶிகனும் திருநாராயணபுரத்தில் சிலநாளிருக்கவேணும் என்றருளிச் செய்ய, தம்பதிகளும் தேஶிகன்

1. எழுந்து வணங்காமை 2. வாட்டமடைந்தவர்களாய்.

நியமநம் பெற்றுக் கோயிலேற வெழுந்தருளி தேசிகன் திருவடிகளிலே அத்யந்த ப்ரவணராய் இவ் வ்ருத்தாந்தங்களையெல்லாம் அங்குள்ளவர்களுக்கு அறிவிப்பித்துக்கொண்டிருக்கிற காலத்தில் ஒரு குமாரரவதரிக்க, தேசிகன் ஸ்ரீபாத தீர்த்த ப்ரபாவத்தாலே அவதரித்த அந்தக் குமாரருக்குத் தீர்த்தப் பிள்ளை என்று திருநாமம் சாற்றினதோடே தந்திருத்தகப்பனருடைய திருநாமத்தையும் தேசிகன் திருநாமத்தையும் சேர்த்து ஆய்பியாழ்வான்பிள்ளை யென்றும் திருநாமம் சாற்றினர்.

## தேசிகன், ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயர் வைபவங்கள்

பின்பு தேசிகனும் கோயிலை ஸ்மரித்து,

"ஸத்த்வே திவ்யே ஸ்வயமுதயதஸ் தஸ்ய தாம்ந: ப்ரணங்காந்
மஞ்ஜூஷாயாம் மரதகமிவ ப்ராஜமாநம் ததந்த: |
சேதோ தாவத்யுபஹிதபுஜம் ஶேஷபோகே ஶயாநம்
தீர்காபாங்கம் ஜலதிதநயா ஜீவிதம் தேவமாத்யம் ||"

என்னும்படி த்வரித்துச் சில முதலிகளுடனே தேவியையும் குமாரரையும் ஸத்யமங்கலத்திலிருக்கும்படி நியமித்தருளிப் பேரருளாள ஜீயர் முதலான முதலிகளோடே தாம் கோயிலேற வெழுந்தருளி,

"ப்ராய: ப்ரபதநே பும்ஸாம் பௌந:புந்யம் நிவாரயந் |
ஹஸ்தஶ் ஸ்ரீரங்கபர்துர் மா மவ்யாதபயமுத்ரித: ||"

என்று அநுஸந்தித்து ஸ்ரீரங்கநாச்சியாரையும் அழகிய மணவாளனையும் திருவடி தொழுது ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, வடதேசத்தினின்றும் ஒரு மஹாவித்வான் வந்து, வேதாந்தத்தில் வாதம் பண்ணவேணும் என்ன, தேசிகனும் பேரருளாள ஜீயரை நியமித்தருள, அவரும் ஶததூஷணியைக் கொண்டு மற்றும் அநேக ப்ரமாணங்களாலும் யுக்திகளாலும் வேதாந்தத்தில் [1]த்ரிராத்ரம் வாதம் பண்ணி அவனை ஜயித்துத் தேஶிகன் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பிக்கும்படி பண்ணுவிக்க, தேசிகனும் அந்த வாதக்ரமத்தைக்கேட்டருளி "நீர் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரர்" என்று அருளிச்செய்து குளிரக் கடாக்ஷித்

1. மூன்று இரவு.



ஸ்ரீதேசிகனுக்குப்பின் ஆசார்ய பரம்பரையில் அக்ரகண்யரான
ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர்
(மைசூர் ஸ்ரீபரகாலமடத்தின் ப்ரதமஜீயர்)

தருள, ஸுதர்ஸநபட்டர் முதலானாரும் அது ஒக்குமென்றுகந்தருள, தேஸிகனும் இப்படி ப்ரஸித்த ஸிஷ்யர்களோடே இருக்கிறரென்று சிலர் அஸூயையாலே வெறுத்திருந்தார்கள். இவ்வர்த்தத்தை

“ கலயதாம் கவிதார்கிககேஸரி-
ப்ரகடிதாம் ஸததூஷணிகாம் ஹ்ருதி |
ஸமகவத்ஸூஜயா: கலு மாயிந:
ப்ரணிபதந்தி பரம் பதயோர் முஹு: ||

அபி காம மத லோப ஸடதாதி ரஹிதா
அபி நீதி த்ருதி ஸாந்தி மதி தாந்தி ஸஹிதா: |
யதிராஜ மத துர்ய பதபத்ம விமுகா
அவலோக நதிமாந நுதிபாஹ்ய விஷயா: || ”

என்று ப்ரதிவாதி பயங்கர மண்ண னருளிச்செய்தார்.

பின்பு எம்பெருமானுர் அருளிச்செய்த கத்யத்தில் ப்ரஸாதித்த ஸரணாகதியை ஸத்துக்கள் அநுஷ்டிக்கும்படி பண்ணிவைத்த நம் தேஸிகனுடைய வைபவத்தை ஸஹிக்கமாட்டாத கலிபுருஷன் சில அஸூயாளுக்களிடத்தில் ப்ரவேஸித்து ஸத்துக்களை பரிபவம் படுத்தினன்.

பின்பு கலியுகத்தில் நாலாயிரத்துநானூற்றுமுப்பத்தெட்டாவதான தாதுவர்ஷம் பங்குனிமாஸம் ப்ரஹ்மோத்ஸவத்தில் ஒருநாள் அழகியமணவாளன் திருக்காவேரிக்கரையில் ஒரு திருமண்டபத்திலெழுந்தருளியிருக்கும்போது ஒரு ஸ்ரீவைஷ்ணவர் “இப்படி ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தோடே தன்னுடைச்சோதியில் அடியேனுக்கு இப்போதே தேவரீர் ஸேவைஸாதித்தருளவேணும்” என்று [1]அங்க பஞ்சக ஸம்பந்நமாக ஆர்தப்ரபதநஞ்செய்தருள, அழகிய மணவாளனும் “கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணஸ்யதி” என்றருளிச்செய்தவஞனையாலே ப்ரணத பரதந்த்ரனுய் அவன் சொன்னபடி செய்யாவிடில் ஸகல பலஸாதநமான ப்ரபத்தியையே பரமபுருஷார்த்தத்திற்கு முக்யோபாயமாக சரமஸ்லோகத்தில் அறுதியிட்ட விஸேஷார்த்தத்தை “உதாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்” என்கிற முக்யாதிகாரி

1. ஐந்து அங்கங்கள் நிறைந்ததாக.

களும் விஶ்வஸிக்கமாட்டார்கள்'' என்று அந்த ஆர்த ப்ரபதநத்தைத் திருவுள்ளம்பற்றியருள, அவ்வளவில் துருஷ்க ஸேநைகள் அத்தேஶ ஹிம்ஸார்த்தமாக வந்து ஜயத்வஜம் போட்டிருக்க, அத்தைக் கண்டு அதிகாரியும் பெரிய பெருமாளுக்குக் [1]கல்லாலே திருத்திரைசாத்தி ஒரு விக்ரஹத்தை முன்னே வைத்து அழகிய மணவாளனுக்கும் பெரிய திருத்திரை பரிமாறி பெருமாளையும் நாச்சிமாரையும் திருப்பெட்டகத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு காடேறப்போக,

## தேசிகன் ஶ்ருதப்ரகாஶிகையை ஶோதித்து ப்ரவர்த்திப்பித்தல்

துருஷ்க ஸேனையும் பஹு ஸ்ரீவைஷ்ணவர்களை ஹிம்ஸிக்க, பெருமாளைப் பின் தொடர்ந்து போகிற தேசிகனை ஸுதர்ஶநபட்டரும் கைபிடித்துக்கொண்டு 'இந்த ஶ்ருதப்ரகாஶிகையை ஶோதித்து ப்ரவர்த்திப்பிக்கவேணும்' என்றும், 'இது உம்மாலே தழைக்கும்படி நம் அம்மாள் திருவுள்ளமாகையால் இந்த ஸமயத்தில் உம்மைக்கண்டேன்' என்றும் அருளிச் செய்து, தாம் எழுதியருளின பட்டோலையையும் தம் குமாரராளையும் தேசிகன் கையில் ப்ரஸாதித்தருளி, ''பெருமாளைக் கூடத் தொடர்ந்து ஸம்ரக்ஷிக்குமதைக்காட்டிலும் இந்த ஶ்ருதப்ரகாஶிகையை ஶோதித்து ப்ரவர்த்திப்பிக்குமது முக்ய கைங்கர்யம்'' என்றும், ''இந்தப் பாலர்களை ரக்ஷித்துக் கொள்ளும்'' என்றும் அருளிச்செய்தார். அப்படியே தேசிகனும் ஶ்ருதப்ரகாஶிகையினுடைய பட்டோலையையும் மணலிலே புதைத்து அந்தக்குமாரர்களும் தாமும் சவத்தின்நடுவே ஒளிந்திருந்து அஸ்தமித்தவாறே அந்தப் பட்டோலையையு மெடுத்துக்கொண்டு அந்தக்குமாரர்களுடனே ஸத்யமங்கலமேற எழுந்தருளுவதாய் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் முதலான முதலிகளைப் பறிகொடுத்தோமே என்று திரும்பிப் பார்த்துக்கொண்டு ஒரு மஹாரண்யத்தில் எழுந்தருள, ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் சில முதலிகளுடனே பெருமாளைப் பின்தொடர்ந்து காடேறப் போய் அங்குத் தேசிகனைக் காணமையாலே திரும்பவும் கோயிலேறப்போக, ஶோகார்த்தாளாகையாலே வழி திகைத்து அந்த மஹாரண்யத்தில் தேசிகன்

1. மூலஸ்தானத்தில் உள்ள பெருமாளை கல்லைக் கொண்டு மறைத்தல்.

எழுந்தருளியிருக்கிற இடத்தில் வந்துசேர, இருவருங் கண்டோமே என்று மகிழ்ந்துகொண்டு, ஸுதர்ஶநபட்டர் நியமநத்தைத் தலைக் கட்டுவதாய் ஸத்யமங்கலமேற வெழுந்தருளி, ஶ்ருதப்ரகாஶிகையையும் ஶோதித்து ப்ரவர்த்திப்பித்துக்கொண்டு, அந்தக் குமாரர்கள் இருவருக்கும் உபநயநாதியாய் ஶாஸ்த்ரங்களையும் விஶேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்துக் கொண்டு ஸத்யமங்கலத்தில் எழுந்தருளியிருந்தார்.

அழகிய மணவாளனும் அழகர்திருமலையில் எழுந்தருளியிருந்து மேல்நாட்டு வழியாய்த் திருமலையில் எழுந்தருளி திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் நித்யாராதநோத்ஸவாதிகளையும் கொண்டருளிக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

ஸுதர்ஶநபட்டர் முதலான முதலிகள் துருஷ்க ஹிம்ஸையில் திருநாட்டுக்கு எழுந்தருளினார்கள். அழகிய மணவாளப் பெருமாள் நயினார் முதலானாரும் துருஷ்க ஹிம்ஸையில் தேஹாவஸாநத்தையடைந்தார்கள். பிள்ளைலோகாசார்யரும் பெருமாளுடனே சில தூரம் பின் தொடர்ந்து மார்க்க மத்தியில் துருஷ்க ஹிம்ஸோபத்ரவத்தாலே மறுநாள் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

பின்பு தேசிகனும் உடையவருக்கு அத்யந்தாபிமதமாயிருந்துள்ள திருநாராயணபுரத்தேற எழுந்தருளி ஸகுடும்பமாக முதலிகளுடனே திருக்கல்யாண தீர்த்தத்தி னீராடிக் கோயிலுக்குள்ளே புகுந்து,

“ கபர்திமதகர்தமம் கபிலகல்பநாவாகுராம்
துரத்யய மதீத்ய தத் த்ருஹிண தந்த்ர யந்த்ரோதரம் |
குத்ருஷ்டிகுஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண:
கரக்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம் முநி: || ”

என்று அநுஸந்தித்து உடையவரைத் திருவடிதொழுது,

“ லக்ஷ்மீ கௌஸ்துபலக்ஷணேந வபுஷா
வாசம் விநைவ ஸ்வயம்
ஶ்வேத த்வீப நிவாஸிநாமிவ திஶந்
ஸந்தோஷமந்தர்முகம்
வித்யா வீசி ஸஹஸ்ர ஸம்ப்ரம
மிளத் துக்தார்ணவாடம்பரே



திருவஹீந்திர புரத்தில் திவ்ய ஸேவை தரும்
ஸ்ரீமத் வேதாந்த தேசிகன்
(சில்பி ஒருவனை ஜயிக்க ஸ்ரீதேசிகனே நிர்மித்த விக்ரஹம்)

ஷ்தாநம் ஸம்யமிஸார்வபௌம விஜய
ஸ்தாநே விதத்தே ஹ்ரி: ॥"

என்று சொல்லப்படுகிற திருநாராயணனையும், செல்வப் பிள்ளையையும், யதுகிரிநாச்சியாரையும் திருவடிதொழுது நிற்க, திருநாராயணனும் "நம்மை பாஷ்யமுகத்தாலும் ஸாக்ஷாத்தாகவும் ஸ்வரூபம் நிலை நிற்கும்படி பண்ணின ராமாநுஜனுடைய ஸித்தாந்தத்தை அவ்யாஹதமாயிருக்கும்படி க்ரந்தமுகத்தாலும் வாதமுகத்தாலும் நிலை நிறுத்தினீரே" என்று போரஉகந்தருளி திருமாலை முதலான வரிசைகளையும் ப்ரஸாதிக்க, தேசிகனும் அவைகளைப்பெற்று உள் மகிழ்ந்து, உடையவராலே அவ்விடத்தில் ஷ்தாபிக்கப்பட்ட மூல பேரத்தையும், திருநாட்டுக் கெழுந்தருளும்போது ஆலிங்கநம் பண்ணிக்கொண்டு கிடாம்பியாச்சானுக்கு ப்ரஸாதித்தருள, அந்த ஆச்சானாலே பின்பு ப்ரதிஷ்டிதமான உத்ஸவ பேரத்தையும் ஒரு சேர்த்தியிலே கண்டு திருவடிதொழுது நிற்க, உடையவரும் "இப்படி திவ்ய தம்பதிகளாலே கொண்டாடப்பட்டு நம்முடைய ஸித்தாந்தத்தை நிலை நிறுத்தினவராக இருந்துள்ள உமக்குத் தருந்த பாரிதோஷிகம் ஒன்றும் இல்லை" என்றும், "உமக்குப்பின்பு உம்மையும் அதிசயித்து இந்தஸ் ஸித்தாந்தத்தை இந்த வரதாசார்யர் ப்ரவசநம் பண்ணுவர்" என்றும் அர்ச்சகமுகேந அருளிச்செய்து திருமாலை முதலான வரிசைகளையும் ப்ரஸாதிக்க, தேசிகனும் உள் மகிழ்ந்து அந்த வரிசைகளையும் பெற்று, வரதாசார்யரையும் குளிரக் கடாக்ஷித்து அவருக்கும் ப்ரஸாதித்து விடை கொண்டு, அவ்விடத்திலேயே நித்யகைங்கர்யங்களையும் திருநாராயணன் மங்களாஶாஸநத்தையும் பண்ணிக்கொண்டு சிலநாளெழுந்தருளியிருக்க,

## தேசிகன், நயினாராசார்யர், ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் வைபவங்கள்

அப்போது வரதாசார்யரும் பகவத்விஷயமான ஆறுயிரப்படியைத் தேசிகன் செய்தருளின வ்யாக்யாநத்தோடே அதிகரித்தருள, ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் அத்தை அதிகரியாமலிருக்க, தேசிகனும் "நீர் அதிகரிக்கலாகாதோ?" என்றருளிச் செய்யப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ரஜீயரும் "வரதாசார்யரிடத்தில் உடையவர் விஶேஷ கடாக்ஷம் பண்ணியிருப்பதால் அவரிடத்தில் ஸதீர்த்தத்வ புத்தி பண்ணாமல் ஆசார்யத்வத்தை வஹிக்

வேண்டும் என்று அபிநந்தி பண்ணின அடியேனுக்கு அவசிஷ்ட மான பகவத் விஷயத்தை அவரிடத்தில் அதிகரிக்கும்படி நியமித் தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க, அத்தைக்கேட்டு வெண்ணெய்க் கூத்தஜீயர் முதலானவர்களும் அப்படியே ப்ரார்த்திக்க தேசிகனும் அத்தைத் திருவுள்ளம்பற்றி அவர்களுக்குப் பகவத்விஷயத்தை ப்ர ஸாதிக்கும்படி வரதாசார்யருக்கு நியமித்தருள, அவரும் அப்படியே கலியுகத்தில் நாலாயிரத்து நானூற்று நாற்பதாவதான பஹுதாந்ய வர்ஷம் ஆவணிமாஸம் ஶுக்லத்விதீயை கூடின ஹஸ்த நக்ஷத்ரத்தில் பகவத்விஷயத்தை அவர்களுக்கு ப்ரஸாதிக்கும் போது ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும்,

"ஸ்ரீமல்லக்ஷ்மணயோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் |
விஶ்வாமித்ர குலோத்பூதம் வரதார்யமஹம் பஜே ||"

என்று அவர்விஷயமாக ஒரு தனியனை அநுஸந்தித்துப் பின்பு "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:" என்கிற தனியனையும் அநுஸந்தித்துப் பின்பு உடையவர் பரிபூர்ணகடாக்ஷபாத்ரராயும் அப்பிள்ளார் பரி பூர்ண கடாக்ஷ பாத்ரராயுமிருந்துள்ள வேதாந்ததேசிகன் விஷயமாக,

"ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ||"

என்று ஒருதனியனை விண்ணப்பஞ்செய்து அநுஸந்தித்துப்பின்புள்ள குருபரம்பராநுஸந்தாநத்தையும் செய்து பகவத்விஷயத்தை அதி கரித்தருள, இவ்வ்ருத்தாந்தத்தை முதலிகள் தேசிகன் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்ய, தேசிகனும் அத்தைக்கேட்டு 'ஸ்ரீமாந் வேங் கட நாதார்ய:' என்கிறது தம்முடைய பெருமையைச் சொல்கிறது என்றும் "ராமாநுஜதயாபாத்ரம்" என்கிறது ஸ்வாசார்ய கடாக்ஷத் தின் பெருமையைச் சொல்கிறது ஆகையாலே இது மிகவும் கொண் டாடத்தக்கது என்றும் அருளிச்செய்ய, முதலிகளும் 'ஆகில் எத்தை அநுஸந்திக்கவேண்டுவது?' என்று கேட்க, தேசிகனும் அத்தை ஸுதர்ஶநபட்டர் திருவுள்ளம் பற்றி நியமித்திருக்கையாலும் ஸ்ரீபாஷ் யாதிகரண தசையில் உண்டானதாகையாலும் இது ஆசார்யர்கள் திருநாமம் பொருந்தியிருக்கையாலும் பகவத்விஷயாதிகரண தசை யில் உண்டானதாகையாலும் முன்புற்ற "ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய:" என்கிற தனியனை ஸ்ரீபாஷ்யாதி ஸம்ஸ்க்ருத க்ரந்தங்

களை அதிகரிக்கும்போது அநுஸந்திக்கும்படிக்கும், பின்புற்ற "ராமா நுஜ தயாபாத்ரம்" என்கிற தனியனை ஆறுயிரப்படிமுதலான நாலாயிர ப்ரபந்த வ்யாக்யாநங்களை அதிகரிக்கும்போது அநுஸந்திக்கும் படிக்கும் ஒரு [1]விபாகம் செய்து நியமித்தருள, அத்தை அங்குள்ள பெரியோர்களும் 'ஒக்கும் ஒக்கும்' என்று உகந்தருள, வரதாசார்யர் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் முதலான முதலிகளும் அப்படியே அநுஸந்தித்து ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதி விசேஷார்த்தங்களையும் ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, தேசிகனும் உடையவரை முன்னிட்டு யதுகிரிநாச்சியார் திருநாராயணன் செல்வப்பிள்ளை அழகிய சிங்கர் திருவடி தொழுது,

"நவ நவ பஹு போகாம் நாத நாராயணத்வம்
விரசய துரிதௌகஸ் தாமநாக்ராத கந்தாம் |
ஸஹஜ ஸுலப தாஸ்யைஸ் ஸத்பிரப்யர்தநீயாம்
யதிபரிப்ருட ஹ்ருத்யாம் யாதவாத்ரேஸ் ஸம்ருத்திம் ||"

என்று அந்தத் திவ்யதேசத்திற்கு மங்களாசாஸநம் செய்தருளி விடைகொண்டு, ஸத்யமங்கலமேற வெழுந்தருளி, முதலிகளுக்கு விசேஷார்த்தங்களை ப்ரஸாதித்துக் கொண்டிருக்கிற காலத்தில், ஒருநாள் "திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர் பொன்னித் திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளும், கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென் கண்ணிணைக ளென்று கொலோ களிக்குநாளே?" என்று [2]விரஹா ஸஹிஷ்ணுதையாலே அபீதிஸ்தவ ரூபமான ப்ரபத்தி பண்ணி "அழகிய மணவாளன் கோயிலேற எழுந்தருளி முன்புபோலே குறைவற வாழ்ந்தருளவேணும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அப்போது அந்த ப்ரபத்தியாலே ப்ரஸந்நனாய் அழகிய மணவாளனும் கோயிலேற எழுந்தருளும்படி திருவுள்ளம் பற்றியருள, அவ்வளவில் கோபணராயன் என்கிற ஒரு ப்ரபுவானவன் திருமலையினின்றும் அழகியமணவாளனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் செஞ்சியில் சிங்கபுரத்தில் சிலநாள் ஆராதிப்பித்துக்கொண்டிருந்து கலியுகத்தில் சசருo-ஆவதான ஸர்வதாரிவர்ஷத்தில் கோயிலேறப் போய் அந்தத் துருஷ்கரை ஜயித்து அழகிய மணவாளனை

1. பகிர்ந்து 2. பிரிவாற்றாமையாலே.

யும் நாச்சிமார்களோடே கூட கோயிலேற எழுந்தருளப் பண்ணிப் பெரிய பெருமாளையும் அழகியமணவாளனையும் ஒரு சேர்த்தியாக்கி நித்யோத்ஸவாதிகளை யெல்லாம் நடப்பிக்க, அழகியமணவாளனும் "க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ" என்கிற படியே அதி ஸந்துஷ்டரா யெழுந்தருளியிருந்துகொண்டு தேசிக னுக்கு "உம்முடைய ப்ரபத்தியை ஸபலமாக்கின நம்மைச் சடக் கென வந்து காணீர்" என்று ஸ்வப்நம் காட்டியருள, விடிவோரைத் தேசிகனும் இந்த ஸ்வப்நத்தை முதலிகளுக்கருளிச் செய்ய, அவ் வளவில் கோபணராயன் கோயிலிலே துருஷ்கரை ஜயித்து அழகிய மணவாளப் பெருமாளையும் எழுந்தருளப் பண்ணுவித்து நித்யோ த்ஸவாதிகளையும் நடப்பிவிக்கிறுரென்று வருவார் செல்வார்கள் சொல்லிக்கொண்டு போக அத்தையும் கேட்டருளி, ஆநந்த பாஷ் பங்கள் பெருக்கி, முதலிகளோடே ஸகுடும்பமாக ஸத்யமங்கலத்தில் பேரருளாளன் திருவடி தொழுது விடை கொண்டு "கதா த்ரக்ஷ்யா மஹே ராமம் ஜகதஶ் ஶோகநாஶகம்" என்கிறபடியே பேரவா பிறந்து கோயிலேறச் சடக்கென எழுந்தருள, பெரிய பெருமாளும் அநந்தகொத்து பரிஜநங்களையும் திருமாலை ஸ்ரீஶடகோபன் முத லான வரிசைகளுடனே எதிர்கொண்டு போரும்படி அர்ச்சகமுகேந அருளிச் செய்ய, அவர்களும் அப்படியே செய்ய, தேசிகனும் அவ்வரிசைகளையெல்லாம் பெற்று உள் மகிழ்ந்து கோயிலிலே எழுந் தருளி ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருவடி தொழுது நிற்க, நாச்சியாரும் குளிரக்கடாக்ஷித்தருள, தேசிகனும் தீர்த்தாதிகளைப் பெற்று விடை கொண்டு திருமணத் தூணருகே சென்று பெரிய பெருமாளையும் அழகிய மணவாளனையும் நாச்சிமார்களுடனே ஒரு சேர்த்தியில் கண்டு திருவடி தொழுது,

"க்ஷணேபி தே யத் விரஹோதிதுஸ்ஸஹ:"

என்றிருக்கிற அடியேனை, இத்தனை நாள் பிரித்ததே" என்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாளும்,

"'ஶோகஸ் தே விஹதஸ்ஸர்வ:
கல்யாணம் த்வாமுபஸ்திதம்'

என்கிறபடியே உமக்கு இனி ஒரு குறையும் இல்லை" என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்து தீர்த்தம் முதலானவைகளை

1. தூஷிக்கத்தக்கது.

ப்ரஸாதித்தருள, தேசிகனும் அவைகளைப்பெற்று "'யாவதாவர்த்த தே சக்ரம்' என்கிறபடியே இனி காலதத்வமுள்ளத்தனையும் ஒரு குறையுமன்றிக்கே பெருஞ் செல்வத்தோடே வாழ்ந்தருளவேணும்" என்று மங்களாஶாஸநரூபமாக,

"விதி விஹித ஸபர்யாம் வீத தோஷாநுஷங்கா-
முபசித தநதாந்யாமுத்ஸ்வைஸத்யாநஹர்ஷாம் |
ஸ்வய முபசிநு நித்யம் ரங்கதாமந் ஸுரக்ஷாம்
ஶமித விமதபக்ஷாம் ஶாஶ்வதீம் ரங்கலக்ஷ்மீம்"

என்கிற ஶ்லோகத்தை விண்ணப்பஞ் செய்து அழகிய மணவாளனை எழுந்தருளப் பண்ணுவித்த கோபணராயர் விஷயத்தில் க்ருதஜ்ஞதையாலே,

"ஆநீயாநீலஶ்ருங்க த்யுதிரசித ஜகத்
ரஞ்ஜநா தஞ்ஜநாத்ரேஶ்
சஞ்ஜ்யா மாராத்ய கஞ்சித் ஸமயமத
நிஹத்யோத்தநுஷ்காந் துருஷ்காந் |
லக்ஷ்மீக்ஷ்மாப்யா முபாப்யாம் ஸஹ நிஜ நிலயே
ஸ்தாபயந் ரங்கநாதம்
ஸம்யக்சர்யாம் ஸபர்யா மக்ருத புவி யஶ:
ப்ராபணோ கோபணார்ய:* ||"

என்கிற ஶ்லோகத்தையும் அருளிச் செய்து பெருங் கூட்டத்து முதலிகளோடே ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அப்போது சித்ரகூடத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவதாஸர் வந்து ஒருவர் முகமாக இப்போது தில்லியார் [1]பரஸ்பரஸ்பர்த்திகளாயிருக்கையாலே [2]ராஜாவலம்பநமுண்டாகில் பகவத் ப்ரதிஷ்டை செய்யலாம் என்று அறிவிப்பிக்க, தேசிகனும் அச் செய்தியை கோபணராயனுக்குத் தெரிவிப்படுத்தி அவனைக் கொண்டு சித்ரகூடத்தில் கோவிந்தராஜனை "திறல் விளங்குமாருதியோடமர்ந்தான் றன்னை" என்கிறபடியே திருவடி முதலான பரிவாரங்களோடு திருப்ரதிஷ்டை

1. ஒருவர் மற்றொருவரோடு போட்டியுள்ளவர்களாய் 2. அரசன் உதவி.

*(இந்த ச்லோகத்தை ஸேனைமுதலியார் ஸந்நிதிக்கருகில் மதிள் சுவற்றில் கல்வெட்டாகயிருப்பதைக் காணலாம்.)

செய்து வைத்து "யாவதாவர்த்ததே சக்ரம்" என்கிற ஶ்லோகத்தாலே மங்களாஸாஸநம் செய்தருளிக் கோபணராயனுக்கு விடை கொடுத்துக் கோயிலேற எழுந்தருளினார்.

அப்போது திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும் பெருமாள் கோயிலினின்றும் வந்து ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களில் ஸமர்த்தரானதாலே தேசிகன் திருவடிகளிலே ஆஶ்ரயித்து விஶேஷ ஶாஸ்த்ரங்களையெல்லாம் அதிகரித்தருளினார்.

பின்பு சித்ரகூடத்தில் விஷ்ணு ப்ரதிஷ்டை செய்துவைத்தாரென்று அஸூயையாலே இந்தத் தேசிகனை [1]வாக்பந்தநம் பண்ணி வைத்து நிர்ப்பந்திக்கக் கடவோமென்று நிஶ்சயித்து, பின்பு அந்த ஸர்வதாரி வர்ஷத்தில் அழகிய மணவாளனுக்குத் திருவத்யயநோத்ஸவம் வந்தவாறே சில குமதிகள் கோபணராயன் ஸ்வதேஶம் போன பின்பு அங்குள்ள அதிகாரியைச் சில யுக்திகளாலும் பூர்வ பக்ஷங்களான ஸ்ம்ருதி வாக்யங்களாலும் ப்ரமிப்பித்து, இப்போது திவ்யப்ரபந்த ப்ராமாண்யாதிகளையும் ஸ்வஸித்தாந்தத்தையும் தேசிகன் நிர்வஹித்தாராகில் திருவத்யயநோத்ஸவத்தை நடப்பிக்கத் தகும் என்றும், இல்லாவிடில் ப்ரபந்தாநுஸந்தாநம் தத்கர்த்தாக்களுடைய விக்ரஹங்கள் மர்யாதைகள் ஒன்றும் கூடாது என்றும் நிர்ப்பந்திக்கும்படி பண்ணுவிக்க, அந்த அதிகாரியும் உள்பட்டு உத்ஸவத்தை நிறுத்த, கோயிலநந்தகொத்து பரிஜநங்களும் அப்போதுள்ள பெரியோர்களும் "இப்படி பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமரான தேவரீர் எழுந்தருளியிருக்கச் செய்தேயோ உத்ஸவத்திற்கு விரோதம் வருமோ?" என்று ப்ரார்த்திக்க, தேசிகனும் முதலிகளோடே கோயிலிலே எழுந்தருளித் திருமண்டபத்தில் இருந்துகொண்டு அந்தக் குமதி வித்வாந்களையும் அதிகாரியுடனே அழைப்பிக்க, அவர்களும் வந்து வாதம் ப்ரவ்ருத்தமாக, அந்தக் குமதிகள் கொடியதான க்ஷுத்ரமந்த்ரத்தாலே தேசிகன் மௌநியா யெழுந்தருளியிருக்கும்படி பண்ணுவிக்க, தேசிகனும் அத்தை அறிந்து மாநஸமாக மஹாமந்த்ரத்தை ஸ்மரித்து த்வயத்தை அநுஸந்தித்து "ஸ்ரீமதே ராமாநுஜாய நம:" என்றருளிச் செய்து வாதம் பண்ண, அப்போது குமதிகள் பண்ணின க்ஷுத்ரம் ப்ரஹ்லாதாழ்வான் விஷயத்தில் செய்த க்ஷுத்ரம் போலே பண்ணினவர்களையே பாதிக்க, அந்தக் குமதி

1. பேச முடியாமல் செய்து

களும் தேசிகன் திருவடிகளிலே காகாஸுரனைப் போலே விழுந்து [1]ப்ராணபிக்ஷையைக் கேட்க, தேசிகனும் "ரிபூணாமபி வத்ஸல:" என்கிற கணக்காய்ச் சரணாகதி பண்ணின அந்தக் குமதிகளுக்கும் க்ஷுத்ர விமோசநம் பண்ணுவித்து வாதத்தாலேயும் அவர்களை நிரா கரித்து அவர்களையும் தமக்கு [2]ஆட்படுத்திக் கொண்டு அதிகாரிக்கும் வாதிகள் வந்தால் வாதம் பண்ணவேண்டுமத்தனை போக்கி உத்ஸவ விரோதம் கூடாதென்று நியமித்தருளி அப்படிக்கு ஆஜ்ஞாரூபமான ப்ரஸித்த பத்ரமும் கல்வெட்டு முண்டாக்கித் திருவத்யயநோத்ஸவத்தையும் நடப்பித்து ஸகல வேதாந்த ஸார மான வ்யாஸ ஸூத்ரத்திற்கும் நாலாயிர ப்ரபந்தங்களுக்கும் முக்ய ப்ரமாணமான திருமந்த்ரத்தில் ப்ரதிபாதிக்கிற விசேஷார்த்தங்களை யெல்லாம் பரமைகாந்திகளறிந்து உபாயாநுஷ்டாநம் பண்ணிப் புருஷார்த்தத்தை அடையும் க்ரமத்தைக் குறைவற ப்ரதிபாதிக்கும தான திருமந்த்ரார்த்தம் என்கிற திருநாமத்தையுடைய ஸ்ரீரஹஸ்ய த்ரயஸாரத்தை யருளிச் செய்து,

"அங்கீக்ருத்ய ஸதாம் ப்ரஸத்திமஸதாம் கர்வோபி நிர்வாபித:" என்றருளிச் செய்து ஸாரதீபத்தையும் விரோத பரிஹாரத்தையும் செய்தருளி, ஒருநாள் திருவோலக்கத்தில் ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணியிருக்கும்போது ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயர்,

"பூர்வந் தத் பரகாலநாத யதிரா—
டாசார்ய ஸித்தாந்திதம்
ஸ்ரீரங்கேத்யயநோத்ஸவம் ப்ரதிஹதம்
பூய: ப்ரதிஷ்டாபயந் ।
வேதாந்த த்வய பாஷ்யமப்யகலுஷம்
பக்தார்ய ஸத்விக்ரஹாம்ஸ்
சாகல்பம் நிகமாந்த தேசிகமணிர்
ஜீயா தஜய்யாத்மதீ: ॥"

என்றருளிச் செய்ய, வெண்ணெய்க்கூத்தஜீயரும்,

"பாஷாகீதிர் ந கார்யா ந ச பஹுமதி-
ரப்யத்ர தத்கல்பகாநாம்
நாபி ஸ்தாப்யாஸ் ததர்சா இதி ததிக்ருதா
மாயி துர்போதிதேந ।

1. உயிர்ப்பிச்சை 2. கீழ்ப்படிந்தவர்களாக்கிக் கொண்டு.

யத்யத்ரோக்தம் ப்ரமாணம் ந ஹி விஹதிரிஹே-
  த்யுக்த ஆக்ஷிப்ய பக்ஷாந்
யஶ்சிச்சேதாரஜ்ஞைக்தைஶ் ஶ்ருதி-
  ஶிகரயுகாசார்யவர்யஸ் ஸ ஜீயாத் ॥"

என்கிற ஶ்லோகத்தை அருளிச் செய்ய, அங்குள்ள பெரியோர்களும் கைங்கர்ய பரர்களும் அந்த ஶ்லோகார்த்தத்தைத் தெரிந்து அவ்வர்த்தங்களையெல்லாம் ஸாக்ஷாத்தாகக் கண்டவர்களாகை யாலே தேஶிகனை தண்டன் ஸமர்ப்பித்து ஸித்தாந்தத்தை வாதத்தாலும் க்ரந்தங்களாலும் ஸ்தாபித்துக்கொண்டு பெரியோர்களுக்கு வந்த அவத்யங்களையெல்லாம் தீர்த்து அதெல்லாம் ஒரு தட்டாய் இப்போது திருவத்யயநோத்ஸவ ப்ரதிஹதியைத் தீர்த்து முன்புபோலக் குறைவற நடப்பித்துத் திவ்யப்ரபந்த ப்ராமாண்யத்தையும் ஆழ்வாராசார்யர்களுடைய அர்ச்சா ஸ்தாபநத்தையும் செய்தருளி ஆஜ்ஞா ப்ரஸித்திபத்ரமும் கல்வெட்டுமுண்டாக்கினபடியாலே இஸ்ஸித்தாந்த நிர்வாஹகரான தேவரீர் விஷயமான "ராமாநுஜதயா பாத்ரம்" என்கிற பகவத் விஷயத் தனியனை அநுஸந்தித்துப் பின்பு உடையவர் நியமநப்படிக்கு, "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" முதலான ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணும்படி நியமித்தருள வேணும் என்று ப்ரார்த்திக்க, தேஶிகனும் அழகிய மணவாளனை ஸேவித்து நிற்க, அழகிய மணவாளனும் நம்முடைய மதமான ராமாநுஜஸித்தாந்தமாகிற பயிரை நிரவஶேஷமாய்க் களையெடுத்து விளைப்பித்த நம் வேதாந்த தேஶிகன் விஷயமான, "ராமாநுஜதயா பாத்ரம்" என்கிற ஶ்லோகத்தை அநுஸந்தித்து, "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" முதலாக ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணக்கடவது, என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்ய, அரையரும் அப்படியே அநுஸந்திக்க, தேசிகனுக்கு வரிசைகளையும் ப்ரஸாதித்தருள, தேசிகனும் ப்ரபந்த முடிவிலே உடையவர் நியமநப்படிக்கு,

"ஸ்ரீமந் ஸ்ரீரங்கஶ்ரிய மநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய"

என்று அநுஸந்திக்கும்போது அத்தை [1]த்விராவ்ருத்தி அநுஸந்

1. இரு முறை.

தித்து நிற்க, பெருமாளும் குளிரக் கடாக்ஷித்தருள, தேசிகனும் இது அப்பிள்ளார் கடாக்ஷவிஶேஷமன்றோ? என்று,

"நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார்த ப்ரதாயிநே |
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணஶாலிநே ||"

என்கிற ஶ்லோகத்தையும் அநுஸந்திக்க, அங்குள்ளவர்களும் "முடிவிலேயும் ஆசார்யவந்தநம் செய்தருளவேணும்" என்று காட்டியருளினதாய், "ராமாநுஜ தயாபாத்ரம்" என்கிற ஶ்லோகத்தையும் அநுஸந்திக்க, பெருமாளும் "இது ஸம்புட காயத்ரீபோலே இருந்ததுகாண்" என்றுகந்தருளி தீர்த்தாதிகளை ப்ரஸாதித்தருள, தேசிகனும் அவைகளைப் பெற்றுத் திருவோலக்கம் பெருக்கி ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருவடி தொழுது நிற்க, ஸ்ரீரங்க நாச்சியாரும் "ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே" என்று "நம்பிருவருடைய ஸ்வரூபத்தை வெளியிட்டு உடையவர் கடாக்ஷத்திற்கு முக்ய பாத்ரரான நீர், நம்முடைய வைபவங்களையெல்லாம் வெளியிட்டபடியாலே உமக்கு நம்பெருமாள் ப்ரஸாதித்த வரிசைகள் தகும்" என்றும், "எப்போதும் நம்முடைய ஸந்நிதி முன்பே காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிரும்" என்றும் அர்ச்சகமுநேந அருளிச்செய்து தீர்த்தாதிகளையும் ப்ரஸாதிக்க, தேசிகனும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராய் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதி முன்னமே காலக்ஷேபம் செய்துகொண்டிருக்க, வரதாசார்யரும் அந்தப் பெருமைக்கு மங்களாஶாஸநமாய் "வாழி யிராமாநுசப் பிள்ளான்" என்றும் "வஞ்சப் பலசமயம் மாற்றவந்தோன் வாழியே" என்றும் இரண்டு பாட்டுக்களை அருளிச்செய்ய, ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் "நானிலமுந் தான்வாழ" என்கிற பாட்டை விண்ணப்பஞ் செய்ய, அங்குள்ளவர்களும் "ஸர்வதேஶ தஶாகாலேஷு" என்று தொடங்கி, "வேதாந்த தேசிகனே இன்னமொரு நூற்றாண்டிரும்" என்னும் அளவாக உள்ள இதற்கு "வாழித் திருநாமம்" என்று திருநாமம் சாற்றி ப்ரபந்தாநுஸந்தாநத்துக்கு ஆரம்பத்தில் "ராமாநுஜ தயாபாத்ரம்" முதலானவைகளையும், முடிவிலே "ஸர்வதேஶதஶா காலேஷு" இத்யாதியான வாழித் திருநாமத்தையும் அநுஸந்திக்கும்படி அழகிய மணவாளன் ஸ்ரீரங்கநாச்சியார் நியமநமாகையாலே அப்படிக்கே திவ்யதேஶங்களிலும் திருமாளிகைகளிலும் அநுஸந்திக்

கும்படி நியமித்தருள, அந்தப் பெரியோர்கள் [1]நியமநப்படிக்கு அங்குள்ளவர்களும் அநுஸந்தித்துப் போந்தார்கள்.

இவ்வர்த்தங்களைப் பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில்,

" கல்யப்தேஷு சதஸ்ஸஹஸ்ர ஶதபங்க்-
    த்யப்தே யதுக்ஷ்மாதரே
ஹஸ்தர்க்ஷே பஹுதாந்யவத்ஸர
    நபஶ் ஶுக்லத்விதீயாயுதே |
ஸ்ரீஶஸ் ஸ்ரீஶடஜித் யதீஶ
    நிகமாந்தார்ய ப்ரபாவோஜ்ஜ்வல:
ஸுஶ்லோகோவததார திவ்யமஹிமா
    ராமாநுஜோக்த்யாதிம: ||

வர்ஷே தத்பர ஸர்வதாரிணி
    தநுர்மாஸே து ரங்கஸ்தலே
ஸம்ப்ராப்தா த்யயநோத்ஸவ ப்ரதிஹதிம்
    ஸம்மோசயந்தம் குரும் |
ஸம்மாந்யாநக ஹ்ருத்ய லக்ஷ்மணதயா
    பாத்ராக்ய பத்யோத்தமம்
ஸ்ரீ ஸ்ரீரங்கபதீச்சயா நியமிதம்
    திவ்ய ப்ரபந்தாத்யயே ||

தத் பஶ்சாத் புவி திவ்யதேஶ படலே
    ஸ்ரீவைஷ்ணவாநாம் க்ருஹே
ஸர்வத்ர த்ரமிடாகம ப்ரவசநம்
    ஸ்ரீரங்கராட் சாஸநாத் |
தத்ப்ரயோத்தம பூர்வமேவ ஸுதியஸ்
    ஸந்தஸ் ததா குர்வதே
தத்ஸந்துஷ்டமநாஸ் ஸதிஷ்டபலதஶ்
    ஸ்ரீஶஸ் ஸதா மோததே || "

இந்த ஶ்லோகத்ரயத்தாலே நம்மாசார்யரான த்விதீய ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் அருளிச் செய்தார்.

பின்பு, சித்ரகூட வ்ருத்தாந்தத்தாலும் அத்யயநோத்ஸவ வ்ருத்தாந்தத்தாலும் அதிகுபிதர்களாய்ச் சில குமதிகள் காஶீதேசத்

1. கட்டளைப்படி.

தில் ஒரு மஹாஸமர்த்தனான வித்வானைப் பத்ரிகா முகமாக அறிவித்து அழைப்பிக்க, அந்த மஹாவித்வானும் அதி தநிகனாகையாலே அநேக கோலங்களையும் எடுத்துக்கொண்டு பஹு வித்யார்த்திகளோடே பெருமாள் கோயிலிலே வந்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தூஷித்துக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையும் அதிக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்க, கடிகாசதம் அம்மாள், கிடாம்பி நயினார் முதலானவர்கள் ஸாமாந்யசாஸ்த்ரங்களில் அதி ஸமர்த்தர்களாயிருக்கிலும் ஸ்ரீபாஷ்யாத்யந்வயமில்லாமையாலே சில ஸ்ரீவைஷ்ணவர்கள் முகமாகக் கோயிலிலே தேசிகன் ஸந்நிதியிலே அறிவிப்பிக்க, தேசிகனும் ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரைச் சில முதலிகளோடே போய் அவனை ஜயிக்கும்படி நியமித்தருள, ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர் முதலான முதலிகளோடே பெருமாள் கோயிலேற எழுந்தருளி, பெருந்தேவியாரையும் பேரருளாளனையும் திருவடிதொழுது திருமண்டபத்தில் அந்த வித்வானை அழைப்பித்து வேதாந்தத்தில் [1]ஸப்தராத்ரம் வாதம் பண்ணி அவனை ஜயித்தருள, அவனும் பக்நனாய் "ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ரர் என்கிற திருநாமத்தை இங்குள்ளார் காணும்படி அந்வர்த்தமாக்கினீர்" என்று சொல்லி, "உங்கள் ராமாநுஜஸித்தாந்தம் மிகவும் ப்ரமாணம் உள்ளதுதான், ஆகிலும் "சிகீ சத்ரீ உபாநஹீ" என்கிறபடியே ஸீதாபஹரண ப்ரவ்ருத்தனான ராவணனும், ஸுபத்ரா பரிணய ப்ரவ்ருத்தனான அர்ஜுநனும், அங்கீகரித்த கபட ஸந்ந்யாஸி வேஷத்தைத் தரித்திருக்கை யன்றே [1]தூஷ்யமாயிருப்பது" என்று லௌகிக வாக்யத்தாலே பரிபவப்படுத்த ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் "லௌகிகஜ்ஞோ ஹி நஸ்ய வைதிகந்து ந ஸித்த்யதி" என்கிறபடியே "லௌகிக வ்ருத்தாந்தத்தையே அறியாத உமக்கு அதி கஹந வைதிக மார்க்கமான வேதாந்த விஷயத்தில் ஸூக்ஷ்மார்த்தங்களை அறியும்படி சக்தியுண்டோ?" என்றும், "சிகா யஜ்ஞோபவீத த்ரிதண்டங்களோடே கூடின ஸந்ந்யாஸம் ப்ரபத்தியைப் போலே ஸகல பலஸாதநமாகையாலே அல்ப்ய லாப ரூப ஸீதாபஹரண ஸுபத்ராபரிணயாதிகளைச் செய்து வைத்த ஸந்ந்யாஸம் பரமபலத்தையும் கொடுக்கும் என்று கைமுத்யஸித்தம் அன்றோ?" என்றும், "முண்ட ஸந்ந்யாஸம் ஓர் அல்ப பலத்தைக் கூடவும்

1. ஏழு ராத்ரி.

கொடுக்கமாட்டாது அன்றோ?' என்றும் அருளிச்செய்ய, அவரும் "பாஷ்யகாரர் பௌத்தர்களைக் கற்காணத்தில் வைத்தார், இவர்கள் ராமாநுஜ ஸித்தாந்த விரோதிகள் எல்லாரையும் அப்படிச் செய்ய வல்லவர்கள்" என்று தேசிகன் வைபவத்தில் ஈடுபட்டு ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரிடத்தில் பரதந்த்ரராயிருக்க, பேருளாளன் ஸ்ரீகார்ய துரந்தரரான திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும் ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயருக்குத் திருமாலை முதலான வரிசைகளையும் ப்ரஸாதிக்க, ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராயிருக்க, கடிகாஸதம் அம்மாள், கிடாம்பி நயினார் முதலான சில முதலிகளும் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயர் திருவடிகளிலே ஆஸ்ரயித்து ஸ்ரீபாஷ்யாதிகளை அதிகரித்தருளி,

> " ஹஸ்தீஸம் லோகவிக்யாதம் கௌண்டிந்யம் விதுஷாம் வரம்
> ராமாநுஜார்யஸித்தாந்த ஸ்தாபநாசார்யமாஸ்ரயே ॥ "

என்று அநுஸந்தித்து நிற்க, ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயரும் பேருளாளனையும் திருத்தண்கா விளக்கொளி எம்பெருமானையும் திருவடி தொழுது தேசிகன் திருமாளிகையைத் தம்முடன் ஸமர்ப்பித்து விடைகொண்டு அத்திரளோடே சித்ரகூடத்தில் கோவிந்தராஜனைத் திருவடி தொழுது கோயிலேற எழுந்தருளித் தேசிகனைத் திருவடி தொழுது அந்த வித்வானையும் திருவடிகளிலே சேர்த்து நிற்க, தேசிகனும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரைக் குளிரக் கடாக்ஷித்தருளி அந்த வ்ருத்தாந்தங்களை எல்லாம் முதலிகள் சொல்லக் கேட்டருள, நீர் "பர்யாய பாஷ்யகாரர்" என்றும் 'யுந்தி கல்பநத்திலும் ப்ரஹ்மஸ்ருஷ்டிபோலே வேண்டினபடி சொல்ல வல்லீர்" என்றும் அருளிச்செய்து போர உகந்தருள, கடிகாஸதம் அம்மாளும் தேசிகன் அருளிச் செயலைக் கேட்டு,

> " பர்யாய பாஸ்யகாராய ப்ரணதார்திம் விதூந்வதே ।
> ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ராய த்விதீயப்ரஹ்மணே நம: ॥ "

என்று ஒரு தனியனைச் செய்து அநுஸந்திக்க, தேஸிகனும் அத்தை உகந்தருளி ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயருக்குத் திருவாழி திருச்சங்குகளை ப்ரஸாதித்து ஆள்பட்டிருக்கிற அந்த வித்வானுக்குத் திருவிலச்சினை முதலாக ஸமஸ்த விஸேஷார்த்தங்களையும் ப்ரஸாதிக்கும்படி நியமித்து அந்த வித்வானுக்கு ஜீயர் திருநாமமாகப்

பேரருளாளய்யனப்பை என்று தாஸ்ய நாமமும் ப்ரஸாதிப்பித்துப் பெருங்கூட்டத்து முதலிகளுக்கு ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயங்களையும் மற்றுமுள்ள விஶேஷார்த்தங்களையும் [1]ஸ்திரீகரிப்பித்துக் கொண்டிருக்க, திவ்ய ப்ரபந்தார்த்தங்களில் ஈடுபட்டிருக்கிற ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும்,

"ஸ்ரீமத்வேதாந்த ஸித்தாந்த ஸ்தாபநா நித்யதீக்ஷிதம் ।
ஸ்ரீமந் நாராயணம் வந்தே ஶாந்தம் ஸூரிகுருத்தமை: ॥"

என்று ப்ரதமாசார்யன் விஷயத்திலும் ஆழ்வார்கள் [2]தர்மிக்ராஹக ப்ரமாணாநுஸாரமாக "துலாயாம் ஶ்ரவணே ஜாதம்" என்று தொடங்கி திவ்யஸூரிகளிடத்திலும் சில ஆசார்யர்களிடத்திலும் [3]க்ருதஜ்ஞதையாலே "திவ்ய ஸூரி ஸ்தோத்ரம்" என்று ஒரு ஸ்தோத்ரத்தைச் செய்து தேசிகன் ஸந்நிதியில் ஸமர்ப்பிக்க தேசிகனும் குளிரக் கடாக்ஷித்தருளி "இது செவிக்கினிய செஞ்சொல்லாயிருந்தது" என்று அருளிச் செய்து "ஆழ்வார்களவதரித்த நாளூர் திங்களடைவு திருநாமங்க ளவர்தாஞ் செய்த, வாழ்வான திருமொழிகளவற்றுள் பாட்டின் வகையான தொகையிலக்கம் மற்றுமெல்லாம்" என்று தொடங்கி "வேதாந்த குரு மொழிந்த ப்ரபந்த ஸாரம் சிந்தையினு லனுதினமுஞ் சிந்திப்போர்க்குச் சேமமதாந் திருமாறன் சரணையாலே" என்று பதினெட்டுப் பாட்டுக்களை முடித்து அதற்கு "ப்ரபந்தஸாரம்" என்று திருநாமம் சாற்றி முதலிகளுக்கு ப்ரஸாதித்தருள, அவர்களும் காயத்ரீ திருமந்த்ரங்கள் போலே நித்யமாக அநுஸந்தித்துக் கொண்டு,

"அஶிதில குருபக்திஸ் தத்ப்ரஶம்ஸாதிஶீல:
ப்ரசுரபஹுமதிஸ் தத் வஸ்து வாஸ்த்வாதிகேபி ।"

என்கிறபடியே ஆசார்யபக்தி மேலிட்டவர்களாய் இருந்தார்கள்.

வேதாந்த தேசிகன் திருவடிகளிலே ஆஶ்ரயித்த முதலிகளில் தேசிகன் உகந்து ஸித்தாந்த ப்ரவர்த்தகர்கள் ஆவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் பன்னிருவர்கள். அவர்களாகிறார்:—

---

1. உறுதியாக்கிக் கொண்டிருக்க 2. (சிறந்த குணமுடைய) ஒரு பொருளைக்காட்டிக் கொடுக்கவல்ல பிரமாணங்களை அனுஸரித்து 3. நன்றியறிதலாலே

க. வரதாசார்யர் — எ. திருமலை ஸ்ரீனிவாஸாசார்யர்
உ. ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் — அ. திருமலை நல்லான்
ந. வெண்ணெய்க்கூத்தஜீயர் — கூ. தீர்த்தப்பிள்ளை
ச. ப்ராபாகரஜீயர் — கo. கிடாம்பிப்பிள்ளை
ரு. குஞ்சப்பூர்ராமாநுஜாசாரியர் — கக. கொமாண்டூர் பிள்ளை
சூ. கந்தாடை எம்பார் — கஉ. தூப்புலப்பை.

ஆக பன்னிருவர்கள்.

இப்படித் தேசிகனும் பெருங்கூட்டத்து முதலிகளோடே உபய வேதாந்த ப்ரவசநத்தையும் [1]பாஞ்சகாலிக நித்ய நைமித்திக கைங்கர்யங்களையும் மற்றுமுள்ள அநுஜ்ஞா கைங்கர்யங்களையும் செய்து கொண்டு,

"ஸ்ரீரங்க த்விரத வ்ருஷாத்ரி பூர்வகேஷு
ஸ்தாநேஷு ஸ்திர விபவா பவத் ஸபர்யா ।
ஆகல்பம் வரத விதூதவைரிபக்ஷா
பூயஸ்யா பவதநுகம்பயைவ பூயாத் ॥"

என்று கோயில் முதலான திவ்ய தேசங்களெல்லாம் நித்யமாக வாழும்படி மங்களாசாஸநம் செய்தருளி "இது வழியா மறையோரருளால் யாமிசைந்தனமே" என்றும், வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகாலடியோமுள்ளத் தெழுதிய தோலையிட்டனம் யாமிதற்கென்" என்கிறபடியே ஸ்ரீஹயக்ரீவ திவ்யஸூக்தியாகையாலே "அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாயரஹிதை ரத்யாபி நாலக்ஷித:" என்றும், "பொறை நிலத்தில் மிகும் புனிதர் காட்டுமெங்கள் பொன்ருத நன்னெறியில் புகுதுவாரே" என்றும் சொல்லுகிறபடியே இவ்வழி தப்பினார்கள் "காடு பாய்வர்கள்" என்றும், "வீடு சேருமவர்களெல்லாரும் இவ்வழியே வருவர்கள்" என்றும் அருளிச்செய்து, க்ரந்தங்களாலும் ஶிஷ்யர்களாலும் திவ்ய தேசங்கள் தோறும் ராமாநுஜ ஸித்தாந்தாபி [2]வ்ருத்தியைப் பண்ணிக் கொண்டிருக்க, அந்த வேதாந்த தேசிகனைக் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான இடத்து எம்பெருமான்களும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் உள் மகிழ்ந்து குளிரக் கடாக்ஷித்தருளினார்கள்.

பின்பு ஒரு மஹாஶில்பன் வந்து "அதிவ்ருத்தரா யெழுந்தருளியிருக்கிற தேசிகனை ஶில்பஶாஸ்த்ரத்தில் ஜயித்துத் தான் மாயியாகையாலே ஶததூஷண்யாதிகளாலே தங்களுக்குச் செய்த குறை

1. ஐந்து காலங்களையுடைய 2. வளர்ச்சியை.

யைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்" என்று [1]துரபிஸந்தி பண்ணி அந்தத் தேசிகனைப்பார்த்து "இப்போது இந்த ஶில்பஶாஸ்த்ரார்த் தத்தை அறிந்தவரேயானால் ஒரு விக்ரஹத்தைப் பண்ணக் கடவீர்" என்றுசொல்ல, தேசிகனும் "கடலைக் கடந்தவனுக்குக் குளப்படியில் குளிருண்டோ?" என்று கேட்க, ஶில்பனும் "உம்மைப் போலேயே ஒரு விக்ரஹத்தை ஸலக்ஷணமாகச் செய்யக் கடவீர்" என்று சொல்ல, தேசிகனும் அப்படியே திருவுள்ளம்பற்றி அன்று ராத்ரி யில் திருக்கண் வளர்ந்தருள, பெரிய பெருமாளும் "வலது கையில் ஜ்ஞான முத்ரையும் இடது கையில் ஸ்ரீகோஶமும் இருந்த திருக் கோலமாக உம்முடைய விக்ரஹத்தைப் பண்ணக் கடவீர்"[2] என்று ஸ்வப்நம் காட்டியருள, விடிவோரைத் தேசிகனும் நித்ய கைங்கர் யங்களைச் செய்து அந்தச் சில்பனை அழைத்து ஸ்வப்நத்தையும் அருளிச் செய்து அவன் முன்னமே மழுகாலே விக்ரஹத்தைப் பண்ணி லோஹத்தையும் உருக்கி விட, ஶில்பனும் கட்டியை உடைத்துப் பார்க்க, அதிஸௌந்தரமாய் யதோக்த லக்ஷணமாயிருக் கக் கண்டு ஆஶ்சர்யப்பட்டுப் பக்நனாயிருக்க, தேசிகனும் இதற்குப் பீடத்தைப் பண்ணி சேர்க்கக் கடவை" என்று அருளிச் செய்ய, ஶில்பனும் அப்படியே செய்து, அந்தப் பீடத்தில் சேர்க்கும் போது அதிஸௌந்தர்யத்தாலே கபோலத்தில் அதிகாம்ஶம் இருப்பதாக ப்ரமித்து ஆயுதத்தாலே தொட்டவாறே தேஶிகன் திவ்ய கபோலத் தில் ரக்ததாரை உண்டாக, அத்தைக் கண்டு ஶில்பனும் "ஶில்ப ஶாஸ்த்ர ஸாரம் தெரியாமையாலே இப்படி ப்ரமித்துக் கெட்டேன்" என்று திருவடிகளிலே விழுந்து "ரக்ஷித்தருள வேணும்" என்று ஶரணாகதி பண்ண, தேசிகனும் அவனுக்குத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்து ஆட்கொண்டு அந்த விக்ரஹத்தையும் யதோக்த லக்ஷணமா யிருக்கையாலே "அது இருக்கக் கூடாது" என்று திரு வுள்ளம் பற்றி அப்ரகாஶம் பண்ணி வைத்து "ஶில்பார்த்த ஸாரம்" என்கிற க்ரந்தத்தையும் செய்தருளிப் பெரியபெருமாளைத் திருவடி தொழுது நிற்க, பெருமாளும் "இனி நம் இருவர்களுக்கும் ஒரு குறையும் இல்லை" என்று அருளிச் செய்து தீர்த்தாதிகளையும் ப்ரஸா தித்தருள, தேசிகனும் தீர்த்தாதிகளைப் பெற்றுத் தம் திருமாளிகை யில் எழுந்தருளி முதலிகளுடனே ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக் கொண்டு எழுந்தருளியிருக்க, "ஶதாயு: புருஷ:" என்கிறபடியே

2. கெட்ட எண்ணம்.

நூறு திருநக்ஷத்ரம் பூர்ணமான பின்பு ஸௌம்ய வர்ஷத்தில் கார்த்திகை மாஸத்தில் பூர்ணிமைத் திநத்தில் பெரியபெருமாளைத் திருவடி தொழுது நிற்க, பெரிய பெருமாளும் "ராமாநுஜ ஸித்தாந்தத்தை விளைப்பித்து நம்முடைய குறை தீர்த்துப் பரிபூர்ணரான நீரும் சடக்கென நம் பெரிய வீடு சேரக் கடவீர்" என்று திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதிக்க, வேதாந்த தேசிகனும் "அம்மா வடியேன் வேண்டுவதீதே" என்று விண்ணப்பஞ் செய்து, வரிசைகளையும் பெற்றுப் பெருங் கூட்டத்து முதலிகளோடே ஸந்நிதி ப்ரதக்ஷிணமாக ஆழ்வார்கள் ஆசார்யர்களையும் திருவடி தொழுது வரும் போது, உடையவரும் வரதாசார்யருக்கு "நம் தூப்புனயினாருக்கு அருளிப்பாடு" என்றும், 'இனி இஸ்ஸித்தாந்தத்திற்கு ப்ரவர்த்தகராகும்படி முன்பே நியமித்ததும் அன்றியில் இப்போது விஶேஷமாக அறுதியிடுகிறோம்" என்றும், அர்ச்சகமுகேந அருளிச் செய்து திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதித்தருள, அந்த நயினாராசார்யரும் அவைகளைப் பெற்றுத் தேசிகன் ஸந்நிதியில் நிற்க, தேசிகனும் குளிரக் கடாக்ஷித்தருளி முதலிகளோடே ஸ்ரீரங்க நாச்சியாரைத் திருவடி தொழுது நிற்க, ஸ்ரீரங்க நாச்சியாரும் "பெரிய பெருமாள் நியமநத்தை அறிந்த பெருங் கூட்டத்து முதலிகள் தேசிகன் திருநாட்டுக்கு எழுந்தருளின பின்பு என் செய்யக் கடவோம்?" என்று உள் நடுக்கத்துடனே இருக்கக் கண்டு, உடையவர் திவ்ய தம்பதிகளான நம் இருவர்களுடைய ஸ்வரூபத்தை ப்ரகாஶிப்பித்தாற்போலே திவ்ய தம்பதிகளான நம் இருவருடைய வைபவத்தையும் ப்ரகாஶிப்பித்த ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான வேதாந்த தேசிகனை நம்பெருமாள் நியமநப் படிக்கு ஸ்ரீகோஶமும் ஜ்ஞாநமுத்ரையுமாய் ஒரு திவ்யமங்கள விக்ரஹம் பண்ணிவைத்துப் பெரியவீட்டுக்கு எழுந்தருளின பின்பு நம் ஸந்நிதிக்கு முன்பே ப்ரதிஷ்டை பண்ணி வைத்து ஆராதியுங்கோள்" என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்து திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதித்தருள, தேஶிகனும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராய்த் திருமாளிகையில் எழுந்தருளித் திருமேனியில் நோவு சாத்திக் கொண்டிருக்க, நயினாராசார்யர் முதலான முதலிகளும் ஆளவந்தார் [1]சரமதஶையில் நியமநத்தையும் எம்பெருமானார் சரமதஶையில் நியமநத்தையும் விஶேஷார்த்தங்களோடே

[1] கடைசி காலத்தில்.

பல்கால் கேட்டிருக்கையாலே துணிவதும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே கரைவதும் உண்டாய்க் கண்ணும் கண்ணீருமாய் நிற்க, தேசிகனும் "நயினர் இருக்க உங்களுக்குக் குறைவு உண்டோ?" என்று முதலிகளுக்கும் அருளிச்செய்து, நயினாராசார்யரையும் அழைத்து, "ஸ்ரீரங்கநாச்சியாரும் அழகிய மணவாளனும் அவர்களை ப்ரஸாதித்தருளுகிற உடையவரும் இருக்க உமக்கு என்ன குறை?" என்று அருளிச்செய்ய, நயினாராசார்யரும் ஶாஸ்த்ரார்த்தத்தையும் தேசிகன் நியமநத்தையும் நெஞ்சிற் கொண்டு தெளிந்து முதலிகளையும் தெளிவித்தருள, தேசிகனும் தஶாவதாரப் பெருமாள்களையும் திருமங்கையாழ்வாரையும் திருவடிதொழுது நிற்க, திருமங்கையாழ்வாரும் "நம்முடைய ப்ரபந்தத்திற்கு முக்ய தாத்பர்யமான ஶரணாகதியை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி மஹோபகாரம் பண்ணினீரே" என்று போர உகந்தருளித் தீர்த்தாதிகளை ப்ரஸாதிக்க, தஶாவதாரப் பெருமாள்களும் "நம்முடைய அவதாரங்கள் எல்லாவற்றிலும் உம்முடைய அவதாரத்தில் உண்டான ப்ரயோஜநத்தில் ஏகதேஶமும் இல்லை" என்று போரஉகந்தருளி வரிசைகளையும் ப்ரஸாதிக்க, தேஶிகனும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராய் முதலிகளுடனே திருமாளிகையில் எழுந்தருளி பேரருளாளருக்கும் ஸ்ரீஹயக்ரீவருக்கும் திருக்கார்த்திகைத் திநத்தில் விஶேஷ ஆராதநம் செய்தருளி, உடையவர் [1] திருவடி நிலைகளிலும் அப்பிள்ளார் திருவடி நிலைகளிலும் தீர்த்தங் கொண்டு ஸ்வீகரித்தருளி முதலிகளுக்கும் ப்ரஸாதித்தருள, முதலிகளும் தேசிகன் ஸ்ரீபாத தீர்த்தத்தையும் திருவடி நிலைகளையும் ப்ரார்த்திக்க, தேஶிகனும் திருவுள்ள முகந்து அப்படியே ப்ரஸாதித்தருளி பகவத் ப்ரஸாதாதிகளைத் தாமும் அமுது செய்து முதலிகளுக்கும் அந்தப் போனகம் செய்த சேடமான இன்னடிசில், கறியமுது, திருப்பண்ணியாரம் முதலானவைகளையும் ஸ்வீகரிக்கும்படி ப்ரஸாதித்தருளி திருக்கல்யாணத்திற்குப் புறப்படுமாபோலே மிகவும் உள்மகிழ்ந்து எழுந்தருளியிருக்க, நயினாராசார்யரும்,

"ரவி ஸத்ருஶதநு: ஸ்ரீவேங்கடாசார்யபாத:
கரகலித பவித்ரஸ் ஸோத்தரீயஸ்வபாவ: |
ஸரஸிஜமணி மாலா மூர்த்வபுண்ட்ராந் ததாநோ
மம மநஸி விபாதே ஸந்ததம் ஸந்நிதத்தாம் ||

1. பாதுகைகள்.

நமோ வேதாந்த குரவே நமோ பூயோ நமோ நம: |
ஸஞ்ஜீவநாய ஸர்வேஷாம் யேந ந்யாஸ: ப்ரகாஶித: ||"

என்று தண்டன் ஸமர்ப்பித்துநிற்க, ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயரும்,

"நம: பதமிதம் பூயாத் தஸ்மை வேங்கடஸூரயே |
யத்வாகம்ருதஸேகேந ஸஞ்ஜீவித மிதம் ஜகத் ||

பகவந்தமிவாநந்த கல்யாணகுணஸாகரம் |
வேதாந்த தேஶிகம் நௌமி வேங்கடேஶ குருத்தமம் ||"

என்று தண்டன் ஸமர்ப்பிக்க, திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும்,

"வேதாந்த தேஶிக பதாம்புஜமேவ நித்யம்
மத்தைவதம் கிமபி காங்க்ஷிதஸர்வதாயி |
யத்வைபவஸ்ய லவலேஶ விசிந்தநேந
புத்தி: ப்ரஸீததி விபூதியுகாவலம்பா ||

ஸ்ரீமத்வேங்கடநாதார்யாத் வேதாந்தாசார்யவர்யத: |
ந மே கதிர் பவேதந்யா ஜந்மஜந்மாந்தரேஷ்வபி ||"

என்று தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, தேசிகனும் அவர்களைப் போர உகந்தருளித் தம் திருவாராதநமான பேரருளாளரையும் அப்பிள்ளார் ப்ரஸாதித்த திருவாழி திருச்சங்குகளையும் நயினாராசார்யருக்கும், ஸ்ரீஹயக்ரீவரையும் ஒரு திருவாழி திருச்சங்குகளையும் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயருக்கும் ப்ரஸாதித்தருளி, திருமலை ஸ்ரீநிவாஸாசார்யருக்கு "ப்ரபத்தியே உபாயம்" என்று அருளிச் செய்த பேரருளாளர் தம் திருவுள்ளத்தை நம்மைக்கொண்டு நிறைவேற்றினபடியாலே அந்தப் பேரருளாளருக்கு ஸ்ரீகார்ய துரந்தரரான நீர் குறைவறக் கைங்கர்யங்களையெல்லாம் நடத்தக்கடவீர்" என்று நியமித்தருளி, உடையவர் திருவடி நிலைகளைத் தம் திருமுடியில் ஒத்திக்கொண்டு, "உடையவர் திருவாராதநமான ஸ்ரீஹயக்ரீவர் பிள்ளான் வழியாய் உம்முடைய குலத்தில் வந்து ஸ்வப்நம் காட்டி நம்மிடத்தில் எழுந்தருளினபடியாலே இந்த உடையவர் திருவடி நிலைகளை ஆராதியும்" என்று ப்ரஸாதித்தருளி, முதலிகள் எல்லாருக்கும் விஶேஷார்த்தங்களை அருளிச்செய்து, அப்பிள்ளார் திருவடி நிலைகளைத் தம் திருமுடியிலும் கண்ணிலும் ஒத்திக்கொண்டு, முதலிகளுக்கும் உபநிஷதநுஸந்தாநமும் திருவாய்மொழி அநுஸந்தாநமும்

பண்ணும்படி நியமித்தருள, அவர்களும் அப்படியே அநுஷ்டிக்க, வேதாந்த தேசிகனும் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதிக்கு நேரே வடக்குத் திருவீதியில் தம் திருமாளிகையில் தென்புறத்தில் நயினாராசார்யர் மடியில் திருமுடியும் ப்ரஹ்மதந்த்ரஜீயர் மடியில் திருவடிகளுமாய் அப்பிள்ளார் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டுக் கெழுந்தருளினர்.

"அப்தே ஸௌம்யே ச வாரே கதவதி தரணௌ
வ்ருஶ்சிகம் க்ருத்திகர்க்ஷே
ராகாயாம் வேங்கடேஶோ யதிந்ருபதி மதம்
ஸர்வதஸ் ஸ்தாபயித்வா |
வேதாந்தாசார்யவர்யோ விரசித-
விவிதாநேகதிவ்யப்ரபந்த:
ஸ்ரீஶைலாதீஶகண்டாக்ருதிவபு ரஜஹத்
தேஶிகேந்த்ரோ தயாளு: ||

ஸ்ரீதீயோக்யே ஶகே ஶுக்ல உதபூத் வேங்கடேஶ்வர: |
லப்தப்ராயே ஶகே ப்ராயாத் ஸௌம்யே ஸ பரமம் பதம்" ||

என்று அநுஸந்திக்கப்பட்டதிறே.

பின்பு நயினாராசார்யரும் முதலிகளோடே போர ஶோகார்த்தராய்த் தாமே தேறி,

"கவிதார்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே |
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம: ||"

என்று அந்தச் சரமத் திருமேனியைத் தண்டன் ஸமர்ப்பித்து நீராட்டி ஸ்ரீசூர்ண பரிபாலநம் முதலான ப்ரஹ்மமேத கைங்கர்யங்களையெல்லாம் செய்தருளி, த்வாதஶாஹாந்தத்தில் உடையவர் நியமநப்படிக்குப் பரக்கத் திருவத்யயநத்தையும் செய்தருளி, முதலிகளையும் தேற்றிக் கொண்டு, ஸ்ரீரங்கநாச்சியார் நியமநப்படிக்கு அந்த ஸந்நிதி முன்பே ஒரு தேசிக திவ்யமங்கள விக்ரஹத்தைத் திரு ப்ரதிஷ்டை செய்துவைத்து, ஆராதித்துக்கொண்டு, நாச்சியாரும் பெருமாளும் ப்ரஸாதித்தருளின வரிசைகளை யெல்லாம் பெற்று, உடையவர் நியமநப்படிக்குப் பெருங்கூட்டத்து முதலிகளோடே ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும் பெருமாள் கோயிலேற எழுந்தருளித் தேசிகன் நியமநப்படிக்குப் பேரருளாளருக்கு ஸ்ரீகார்ய

துரந்தரராய்க் கைங்கர்யங்களை நடத்திக் கொண்டிருந்தார். அண்ணன்,

"நிகமாந்த தேசிக பதாம்புஜத்வயம்
நிரஸ்ய வைஷ்ணவ ஜநப்ரியம் தநம் |
குலதைவதம் மம குத்ருஷ்டிமஸ்தக-
க்ஷிதிப்ருத் விபேதி குலிசாயுதாயிதம் ||

ச்ருதிசீர்ஷதேசிக சிரோமணிநா
ஜநகேந யேந ஹி ஸம்சிக்ஷிததீ: |
வரதோ குருர்ச யதிராஜமத-
ப்ரதிவாதிகோடி சதகோடி ரபூத் ||"

என்கிற ச்லோகங்களாலே இவ்வர்த்தங்களை அருளிச் செய்தார்.

## நயினாராசார்யர், ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரசீயர் வைபவங்கள்

பின்பு நயினாராசார்யரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் முதலான முதலிகளோடே ஒரு ஸம்வத்ஸரம் கோயிலிலேயே ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக் கொண்டிருந்து, திக்விஜயம் செய்தருளத் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீரங்கநாச்சியார் பெரியபெருமாள் திருவடி தொழுது, விடைகொண்டு, திருப்பேர் முதலான திவ்ய தேசங்களில் எம்பெருமான்களைத் திருவடிதொழுது அங்குள்ள மதாந்தரஸ்தர்களை ஜயித்துக்கொண்டு, ஸர்வஜ்ஞ சிங்கப்ப நாயகன் ஸமர்ப்பித்த திருப்பல்லக்கு முதலான ஸகல பிருதுகளோடே,

"ஸ்ரீமத்ராமாநுஜார்ய ப்ரகடித பதவீதாவி மேதாவி வித்வத்
ஸேநாநாஸீர வீரோ வரதகுரு ரஹம் வாதிநோ வாரயந்து |
ஆலோகாலோகசைலா தகிலநரபதி த்வாரி பத்நாமி பத்ரம்
மாயா ஸித்தாந்த மாயா விகடித கடநா யந்த்ர மந்த்ர
ஸ்வதந்த்ர: ||"

என்று [1]கட்டியம் கூறி, [2]தவளசங்கம் முதலானவைகளை ஊதுவித்துக் கொண்டு கங்கைகொண்ட சோழபுரம் முதலான ராஜஸ்தாநங்களிலே ஸந்மாநங்களையும் பெற்று, அங்குள்ள மதாந்தரஸ்தர்களையும் ஜயித்துக்கொண்டு "எம்பிரானெந்தை யென்னுடைச் சுற்றம்" என்கிற பாட்டின்படியே திருமங்கையாழ்வார் திருவுள்ளம் குடி

1. பிருது 2. வெண்சங்கு.

புகுந்த தஞ்சை மாமணிக் கோயிலேற எழுந்தருளி, அங்குள்ள எம்பெருமான்களையும் திருவடிதொழுது, அங்குள்ள மாயிகளையும் ஜயித்து, அந்த ராஜாவிடத்தில் ஸந்மாநங்களையும் பெற்று, எழுந்தருளியிருக்கிற காலத்தில், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருநாட்டுக்கெழுந்தருள, அவருக்கு த்வாதஶாஹக்ருத்யத்தைச் செய்து, நயினாராசார்யர் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் ஸந்நிதியில், அவர் ஸம்பந்தி ஒருவர் வந்து தண்டன் ஸமர்ப்பித்து, "இப்போது திருக்கார்த்திகைக்கும் திருவத்யயநோத்ஸவத்திற்கும் மத்யகாலமாகையாலே ப்ராயஶ்சித்தரூபமான திருவத்யயந மில்லையே, என்செய்யக்கடவது?" என்று விண்ணப்பஞ் செய்ய, நயினாராசார்யரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் ஆலோசித்து, "அப்படிச் செய்ய வேண்டுவதில்லை; திருக்குருகைப்பிரான் பிள்ளான் நியமநப்படிக்கு நாலாயிரத்தனியன்களைமாத்ரம் ஸேவித்து, பின்பு தேசிக ப்ரபந்தங்களையும் ஸேவித்து, ப்ராயஶ்சித்தரூபமான திருவத்யயநத்தை முடிக்கலாம்" என்று அருளிச்செய்து, தேசிகன் அருளிச்செய்த க்ரந்தங்களை யெல்லாம் ஒரு ஸந்தர்பவிஶேஷமடியாக ஒரு [1]கோவையாக்கி,

" பரஶ்ஶதம் வாபி பரஸ்ஸஹஸ்ரம்
ஸ்ரீவேங்கடாசார்யக்ருதா: ப்ரபந்தா: |
தத்ராலமேக: கலு புக்திமுக்த்யோ:
கார்த்ஸ்ந்யேந கஸ்தாந் கணயேத் ஸமஸ்தாந் || "

என்கிறபடியே, ப்ரக்ருதாநுகுணமாக அநேக க்ரந்தங்களிருக்கச் செய்தேயும் அவைகளில் நூற்றிருபத்தொரு க்ரந்தங்களை யெடுத்து ப்ரவசநம் பண்ணவேணுமென்றும், இவைகள் அவஶ்ய [2]வேத்யங்களென்றும் நியமித்தருளினார்கள். எங்ஙனேயென்னில்:

(க) ஸ்தோத்ரங்கள் 32. (ச) ரஹஸ்யங்கள் 32.
(உ) காவ்யாதிகள் 8. [24. (ரு) ப்ரபந்தங்கள் 24.
(ந) அநுஷ்டாநாதிஶாஸ்த்ரங்கள் (சூ) பகவத்விஷயம் 1. ஆக. 121

அவைகளின் விவரங்களாவன:—

ஸ்தோத்ரங்கள்:—ஹயக்ரீவஸ்தோத்ரம், தேவநாயக பஞ்சாஶத், அச்யுதஶதகம், கோபாலவிம்ஶதி, தேஹளீஶஸ்துதி, (ரு) வரத

1. தொகுத்து 2. அறியவேண்டியவை.

ராஜபஞ்சாஶத், யதோக்தகாரிஸ்தோத்ரம், காமாஸிகாஷ்டகம், அஷ்டபுஜாஷ்டகம், ஶரணாகதி தீபிகை, (௧௦) பரமார்தஸ்துதி, தயாஶதகம், பகவத்த்யாநஸோபாநம், தஶாவதாரஸ்தோத்ரம், அபீதிஸ்தவம், (௧௫) ந்யாஸதஶகம், ந்யாஸ விம்ஶதி, ந்யாஸதிலகம், பாதுகாஸஹஸ்ரம், ஸ்ரீஸ்துதி, (௨௦) பூஸ்துதி, நீளாஸ்துதி, கோதாஸ்துதி, ஸுதர்ஶநாஷ்டகம், ஷோடஶாயுதஸ்துதி, (௨௫) கருடதண்டகம், கருட பஞ்சாஶத், த்ரமிடோபநிஷத்ஸாரம், த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவலி, யதிராஜஸப்ததி, (௩௦) தாடீபஞ்சகம், திவ்யதேஶமங்களாஶாஸநபஞ்சகம் - ஆக முப்பத்திரண்டு.

காவ்யாதிகள்:—யாதவாப்யுதயம், ஹம்ஸ ஸந்தேஶம், ஸுபாஷித நீவி, வைராக்யபஞ்சகம், ரகுவீரகத்யம், (௫) ஸங்கல்ப ஸூர்யோதயம், பூகோள நிர்ணயம், தத்வ்யாக்யாநம் - ஆக எட்டு.

அநுஷ்டாநாதிஶாஸ்த்ர விஷயங்கள் :—யஜ்ஞோபவீத ப்ரதிஷ்டை, ஆராதநக்ரமம், ஹரிதிநதிலகம், தத்வ்யாக்யாநம், ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை (௫) ஸச்சரித்ரரக்ஷை, ரஹஸ்யரக்ஷை, கீதார்த ஸங்க்ரஹரக்ஷை, நிக்ஷேபரக்ஷை, ந்யாஸவிம்ஶதிவ்யாக்யாநம், (௧௦) ந்யாயஸித்தாஞ்ஜநம், ந்யாயபரிஶுத்தி, தத்வமுக்தாகலாபம் ஸர்வார்தஸித்தி, அதிகரணதர்பணம், (௧௫) அதிகரணஸாராவலி, தாத்பர்யசந்த்ரிகை, தத்வடீகை, ஸேஶ்வரமீமாம்ஸை, மீமாம்ஸா பாதுகை, (௨௦) ஶததூஷணி, சகாரஸமர்தநம், ஈஶாவாஸ்யோபநிஷத் வ்யாக்யாநம், ஶில்பார்தஸாரம் - ஆக இருபத்து நாலு.

ரஹஸ்யங்கள்:—ஸம்ப்ரதாயபரிஶுத்தி, தத்வபதவீ, ரஹஸ்யபதவீ, தத்வநவநீதம், ரஹஸ்யநவநீதம், (௫) தத்வமாத்ருகை, ரஹஸ்ய மாத்ருகை, தத்வஸந்தேஶம், ரஹஸ்ய ஸந்தேஶம், ரஹஸ்ய ஸந்தேஶவிவரணம், (௧௦) தத்வரத்நாவலீ, தத்வரத்நாவலீ ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம், ரஹஸ்யரத்நாவலீ, ரஹஸ்யரத்நாவலீ ஹ்ருதயம், தத்வத்ரயசுளகம், (௧௫) ஸாரஸங்க்ஷேபம், ஸாரதீபம், ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரம், ஸாரஸாரம், அபயப்ரதாநஸாரம், (௨௦) தத்வஶிகாமணி, ரஹஸ்யஶிகாமணி, அஞ்ஜலிவைபவம், ப்ரதாநஶதகம், உபகாரஸங்க்ரஹம், (௨௫) ஸாரஸங்க்ரஹம், விரோதபரிஹாரம், முநிவாஹநபோகம், மதுரகவிஹ்ருதயம், பரமபதஸோபாநம், (௩௦) பரமதபங்கம், ஹஸ்திகிரிமாஹாத்ம்யம் - ஆக முப்பத்திரண்டு.

ப்ரபந்தங்கள் :— ஸம்ப்ரதாயபரிஶுத்தி முதலாய் ஸாரதீப மளவாக ரஹஸ்யங்கள் கள- க்கு அம்ருதரஞ்சனி பாட்டு ௩௯. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ரஹஸ்யம் க-க்கு அதிகாரஸங்க்ரஹம் பாட்டு ருசு. ஸாரஸாரம்முதலாய் மதுரகவிஹ்ருதயமளவாக ரஹஸ்யங்கள் கக-க்கு அம்ருதாஸ்வாதிநிபாட்டு ௩௭. ஹஸ்யம் க-க்கு பரமபதஸோபாநம் பாட்டு- உக (ரு) ரஹஸ்யம் க. க்கு பரமதபங்கம் பாட்டு ருச. ரஹஸ்யம் க - க்கு ஹஸ்திகிரிமாஹாத்ம்யம் பாட்டு உகூ. இவை ரஹஸ்யப்ரபந்தங்கள். அடைக்கலப்பத்து. பா கக. அர்த்தபஞ்சகம். பா. கக. ஸ்ரீவைஷ்ணவதிநசர்யை. பா. கo. (கo) திருச்சிந்நமாலை. பா. கக. பன்னிருநாமம் பா. க௩. திருமந்த்ரச்சுருக்கு. பா. கo. த்வயச்சுருக்கு. பா. கஉ. சரமஶ்லோகச்சுருக்கு. பா. கக. (கரு) கீதார்தஸங்க்ரஹம். பாட்டு. உக. மும்மணிக்கோவை. பா. கo. பந்துப்பா. பா. கo. கழற்பா. பா. கo. அம்மானைப்பா. பா. கo. (உo) ஊசற்பா. பா. கo. ஏசற்பா. பா. கo. நவரத்நமாலை. பா. கo. ஆஹாரநியமம். பா. உக. ப்ரபந்தஸாரம். பா. கஅ. இவை கேவல ப்ரபந்தங்கள். ஆக ப்ரபந்தங்கள் இருபத்துநாலுக்குப் பாட்டு *சருரு பகவத்விஷயம் நாலாயிரக்கருத்து என்கிற எழுபத்து நாலாயிரப்படி. ஆக க்ரந்தங்கள் நூற்றிருப்பத்தொன்று. இந்த க்ரந்தங்களில் பெரியாழ்வார் திருமொழி முதலாய் நூற்றந்தாதி அளவாக இருபத்துநாலு ப்ரபந்தங்களைப் போலே, அம்ருதரஞ்சனி முதலாக ப்ரபந்தஸாரமளவாக இருபத்துநாலு ப்ரபந்தங்களாக்கி, தேஶிகன் விஷயமாக நயினாராசார்யர் அருளிச்செய்த பிள்ளையந்தாதியையும் இயல் ஸேவைக்காக நியமித்து, தஞ்சைமாமணிக்கோயில் எம்பெருமானை நீலமேகப் பெருமாள் ஸந்நிதியில் நாலாயிரத்தனியன்களையும், தேஶிகப்ரபந்தங்கள் இருபத்துநான்கையும், பிள்ளையந்தாதியையும் முன்னம் அநுஸந்தித்து, அவர் நியமநத்தாலே அந்த ஸ்ரீவைஷ்ணவருக்குத் திருவத்யயநத்தையும் நடப்பித்து, மற்றுமுள்ள திவ்யதேஶங்களிலும் இப்படி அநுஸந்திக்கும்படி நியமித்தருள, அங்குள்ளவர்களும் அப்படியே நடப்பிக்க, திருப்பல்லாண்டு தொடக்கமானவாறே அங்கங்குள்ளவர்களும் வந்து, "வரும் திருவத்யயநோத்ஸவத்திற்குப் பின்பன்றோ தேஶிகப்ரபந்தங்களை ஸேவிப்பது? இப்

* சரமஶ்லோகச்சுருக்கம் பாட்டு கo ஆனால் மொத்தப் பாட்டு சருச ஆகும்.

போது என்செய்யக்கடவது?" என்று கேட்க, நயினாராசார்யரும் எம்பெருமானார் நியமனப்படிக்கு நாலாயிரக்ரமத்தை அநுஸந்தித்துத் தேசிகப்ரபந்தங்களையும் ஸேவிக்கும்படிக்கும், திருமாளிகைகளில் ப்ரபந்தாநுஸந்தானம் பண்ணும்போது ஆழ்வார் எம்பெருமானாரோபாதி வேதாந்த தேசிகனுக்கும் ஸம்பாவநாரூபமாக அடைக்காய் ஸமர்ப்பிக்கும்படிக்கும் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயரோடே நியமித்தருள, பெருங்கூட்டத்து முதலிகளும் அங்கங்குள்ளவர்களும் போர உகந்து அப்படியே நடத்திப் போந்தார்கள்.

பின்பு ஆழ்வார்விஷயமான கண்ணிநுண் சிறுத்தாம்பு ப்ரபந்தத்தை முதலாயிரத்தின் முடிவில் ஸ்ரீமந்நாதமுநிகள் சேர்த்தாற்போலவும், எம்பெருமானார் விஷயமான நூற்றந்தாதி ப்ரபந்தத்தை இயற்பா ஆயிரத்தின் முடிவில் எம்பெருமானார் சேர்த்தார் போலவும், நயினாராசார்யரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயரும் தேசிகன் விஷயமான பிள்ளையந்தாதி ப்ரபந்தத்தைத் தேசிகப்ரபந்தத்தின் முடிவில் சேர்த்து அநுஸந்தித்து, அந்த நீலமேகப்பெருமாள் ஸந்நிதியில் அந்த ஆழ்வார் எம்பெருமானார் தேசிகர்கள் திவ்யமங்கள விக்ரஹங்களைத் திருப்ரதிஷ்டை செய்துவைத்தார்கள். அந்த எம்பெருமானார் திவ்ய மங்களவிக்ரஹத்திலும் அலங்காராஸநத்தில் ஒரு திருமேனியா யிருக்கும்படி ஒரு தேசிக திவ்யமங்கள விக்ரஹத்தையும் செய்துவைத்தார்கள்.

பின்பு நயினாராசார்யரும் முதலிகளுடனே திருக்கோட்டியூர் திருமாலிருஞ்சோலை முதலாக திவ்யதேசயாத்ரை பண்ணும்போது ஸ்ரீமதுரையில் பரதத்வ நிர்ணயோத்ஸவத்தை அங்குள்ள குமதிகள் நிரோதித்திருக்க, அவர்களை வாதத்தால் ஜயித்து, அந்த உத்ஸவத்தை அவ்யாஹதமாய் நடக்கும்படி பண்ணுவித்து அத்திவ்யதேசத்தில் தேசிகன் திருப்ரதிஷ்டை செய்துவைத்து, கேரளதேசத்தேற எழுந்தருளுவதாய்த் திருநகரி முதலான திவ்யதேசங்களிலும் எம்பெருமான் திருவடிதொழுது, ஸ்ரீவில்லிபுத்தூரிலும் திருநகரியிலும் தேசிகன் திருப்ரதிஷ்டை செய்துவைத்து, கேரளதேசத்திலும் எம்பெருமான்களைத் திருவடிதொழுது, அந்தத் தேசாதிபதியாலே பூஜிக்கப்பட்டிருக்க, அங்குள்ள க்ஷுத்ரர்கள் சில குண்டுக்கல்லுகளைத் திருமடைப்பள்ளி பரிஜநங்களுக்குத் தலைச்சுமையாயிருக்கும்படி க்ஷுத்ரமந்த்ரத்தாலே பண்ணுவிக்க, நயினா

ராசார்யரும் அத்தை யறிந்து, இரண்டு தேங்காய்களை மஹாமந்த்ரத்தை ஜபித்து, அவர்களிடத்தில் போகும்படிவிட்டு, ஒரு த்ருணத்தைத் தம் திருமுடியில் வைத்துக்கொள்ள, அந்தக் குண்டுக்கல்லுகள் விட்டவர்கள் தலைகளிலே இருக்க, தேங்காய்களும் அவர்களை ப்ரஹரிக்க, அவர்களும் நயினாராசார்யர் திருவடிகளிலே விழுந்து ஸேவித்துப்போக, நயினாராசார்யரும் திருநாராயணபுரமேற எழுந்தருளி, தம்மிடத்தில் விசேஷகடாக்ஷம் செய்தருளின உடையவர் திருவடி தொழுது, யதுகிரி நாச்சியாரையும் திருநாராயணனையும் செல்வப்பிள்ளையையும் திருவடி தொழுது, வரிசைகளையும்பெற்று, அந்தத் திவ்யதேசங்களில் தேசிகப்ரதிஷ்டையும் செய்துவைத்துக் கொண்டு, கோயிலேற எழுந்தருளி, ஸ்ரீபாஷ்யாதி ப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்க, அப்போது ஒரு பங்குனியுத்திரத் திருநாளில் பெருமாளும் நாச்சிமாரும் திருமஞ்சநம் கொண்டருளி ஒரு சேர்த்தியிலே யெழுந்தருளியிருக்க, நயினாராசார்யரும் முதலிகளுடனே மங்களாஸாஸநம் செய்தருளி "என்னது யான் செய்கின்றேன்" என்கிற பாட்டையும், "நின்னருளாங்கதியன்றி மற்றொன்றில்லேன்" என்கிற பாட்டையும், ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர சீயரும் தாமு மநுஸந்தித்து நிற்க, பெருமாளும் நாச்சிமாரும் "இந்தப்பங்குனி உத்திரத்திருநாளிலே உடையவர் அருளிச்செய்த கத்யத்ரயத்தினுடைய அர்த்தத்தை வெளியிடுகிற பாட்டுக்களை அநுஸந்தித்த உங்களுக்கு என்ன வேண்டுவது?' என்று அர்ச்சகமுகேந கேட்டருள, அவர்களும், "இந்தத் திருநாளிலே தேவரீர் உகந்தருளின பாட்டுக்களை உள்கொண்டிருக்கிற தேசிகப்ரபந்தங்களைத் திருச்செவி சாத்தியருளவேணும்" என்று ப்ரார்த்திக்க, பெருமாளும் நாச்சிமாரும் அப்படியே திருவுள்ளம்பற்றி அந்தத்தேசிக ப்ரபந்தங்களை அநுஸந்திக்கும்படி அரையருக்கு அருளப்பாடு இட்டருள, அரையரும் "தம்பரமென்றிறங்கி" என்று தொடங்கி "என்னது யான்செய்கின்றே னென்றுதார்க்கும்" என்கிற பாட்டையும், "நின்னருளாங்கதியன்றி மற்றொன்றில்லேன்" என்கிற பாட்டையும், ஆழ்வார் "எத்திறம்" என்று மோஹித்தாற்போல மோஹித்துப் பத்துவாரம் அநுஸந்தித்துக் கொண்டிருக்க, பெருமாளும் நாச்சிமாருடனே திருவுள்ளம் உகந்தருளி, நம் வேதாந்த தேசிகனுக்கு அருளிப்பாடிட்டருள, நயினாராசார்யரும் முதலிகளுடனே நம் தேசிகனை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோக

அரையரும் மோஹந்தெளிந்து ப்ரபந்தத்தைச் சாத்தினவாறே, பெருமாளும் நாச்சிமாரும் "உம்பர்தொழுந்திருமாலுகந் தேற்கு முபாயமொன்றால், நம்பிறவித் துயர் மாற்றிய ஞானப்பெருந்தகவோர், சம்பிரதாயம்" என்றதனால், நம்மிருவர்களுடைய ப்ராதாந்யத்தையும், ப்ரபத்தி ப்ராதாந்யத்தையும், ஆகிய இவை யிரண்டையும் அறிந்தவர்களுக்கே ப்ரதிபந்தக நிவ்ருத்தி பூர்வகமாகப் பரமபுருஷார்த்தம் கைகூடுமென்றும், "என்னது யான்செய்கின்றேன்" என்கிற பாட்டாலே, பரத்வாதிகளை விட்டு ஸர்வஸுலபனாய் வந்து காலதத்வமுள்ளத்தனையும் எல்லாரும் காணும்படியாக இருந்துகொண்டு, தாம் சொன்ன உபாயத்தில் எல்லாரும் ப்ரவர்த்திக்கும்படி பண்ணி, அவர்களை அடிமைகொண்டு, புருஷார்த்தத்தைக் கொடுக்கிற திவ்யதம்பதிகளான நம்மிருவர்களுடைய மஹோபகாரத்தைக் காட்டியும், "நின்னருளாங்கதியன்றி மற்றொன்றிலேன்" என்கிறபாட்டாலே, கத்யத்ரயத்தில் நிஷ்க்ருஷ்டமான அங்கபஞ்சக ஸம்பந்நாத்மரக்ஷாபரஸமர்பண க்ரமத்தைக் காட்டியும், இப்படி ஸர்வவேதாந்தஸாரமான திருமந்த்ரார்த்தத்தைப் பொதித்துக் கொண்டிருக்கிற இப் ப்ரபந்தங்களை அதிகரித்தவனுக்கு, நம்மிருவர் கருணையாலே நித்யமான ப்ரஹ்மாநந்த முண்டாகுமென்று முடிவிலே "சேமமதாந்திருமாறன் கருணையாலே" என்கிறதால் சொல்லுகையாலும், இப் ப்ரபந்தங்களைக்கேட்ட நாங்களிருவரும் இனியென்றும் குறைவற்றிருப்போம்" என்றும் அர்ச்சகமுகேந அருளிச்செய்து, திருமாலை முதலான வரிசைகளையும் ப்ரஸாதிக்க, அரையரும் "மாமலர்மன்னிய மங்கை" என்று தொடங்கி "தொண்டருகக்குந்துணையடிவாழி" என்று மங்களாசாஸநமாகப் பிள்ளையந்தாதியை அநுஸந்திக்க, அத்தைப் பெருமாளும் நாச்சிமாரும் கேட்டுகந்து அரையருக்கும் திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதிக்க, அப்போது ஓர் ஆசுகவி தேசிகன் விஷயமாக ஒரு காதாஸப்தகத்தைப் பண்ணித் திருவோலக்கத்திற் பாடவேணுமென்று ப்ரார்த்திக்க, அத்தைக் கேட்டுப் பெருமாளும் நாச்சிமாருடனே "இராமாநுச ஸித்தாந்தத்தை யென்றும் குறையற்றிருக்கும்படி பல க்ரந்தங்களாலே ஸ்தாபித்தருளின வேதாந்த தேசிகனுடைய ப்ரபந்தங்களைக் கேட்ட எங்களுக்கு, இனி ஒன்றையும் கேட்க ருசி பிறவாது" என்றும் "நம்முடைய ஸந்நிதியில் நயவேதார்த்த தேசிகனுக்குப் பிற்பட்டவரை அர்ச்சையாக வைத்து

வரிசைகளை நடத்த வேண்டுவதில்லை'' என்றும் ''இந்த, நியம நத்தை அதிக்ரமித்தால் ''மயா ச ஸீதயா சைவ ஶப்தோஸி'' என்கிறபடியே,

''ஏதத் த்ரைலோக்ய நிர்மாண த்ராண ஸம்ஹாரகாரணம் |
ஆவயோரபுராபூதம் ஶாஸநம் ஶாஶ்வதம் பரம் ||''

என்றும் அர்ச்சகமுகேந அருளிச் செய்து, நயினாராசார்யருக்கும் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர சீயருக்கும் தீர்த்தம் திருமாலை முதலானவைகளை ப்ரஸாதித்தருள, அவர்களும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தர்களாய்த் திருவோலக்கத்தைப் பெருக்கி, தேஶிகனையும் ஸந்நிதியில் எழுந்தருளப் பண்ணுவித்து, பெருமாள் நாச்சிமார் நியமநப்படிக்கு அங்கங்குள்ளார்களும் தேஶிக ப்ரபந்தங்களை அநுஸந்திக்கும்படிக்குக் கட்டளையிட்டு, ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக் கொண்டு எழுந்தருளியிருந்தார்கள்.

பின்பு ஒரு புரட்டாசித் திருவோணத் திருநாளில் தேஶிகனுக்குப் பெரிய பெருமாளும் ஸ்ரீரங்க நாச்சியாரும் திருமாலைத் திருப்பரிவட்டம் முதலான வரிசைகளையும், பொற்றளிகைத் திருப்பண்ணியாரம் முதலானவைகளையும் ப்ரஸாதித்தருள, அவைகளைத் தேசிகனுக்கு அமுது செய்யப் பண்ணுவித்துத் திருமாலை முதலானவைகளையும் சாத்தி நாலாயிர ப்ரபந்தங்களையும் தேஶிகப்ரபந்தங்களையும் முன் நியமநப்படிக்குச் சாத்திப் பிள்ளையந்தாதியையும் விண்ணப்பஞ் செய்து, தேசிகன் அருளிச் செய்த பகவத் த்யாநஸோபாநாதி ஸ்தோத்ரங்களை ''ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:'' என்கிற தனியனோடே அநுஸந்தித்து, ஸ்தோத்ரம் முடிவிலும் ''கவிதார்க்கிக ஸிம்ஹாய'' என்கிற தனியனை அநுஸந்தித்து நிற்க; பெரியோர்களும்: ''ராமாநுஜ தயாபாத்ரம்'' என்கிற தனியனை ப்ரபந்தத் தொடக்கத்திலும் சாத்திலும் அநுஸந்திக்கும்படி பெருமாள் நியமநமாகையால் இந்தத் தனியன்களையும் ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரங்களுக்கு ஆத்யந்தங்களிலே அநுஸந்திப்பது ஒத்திருக்கும்' என்று அருளிச்செய்ய, நயினாராசார்யரும் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர சீயரும் அத்தை உள் மகிழ்ந்து அங்கீகரித்து அப்படியே அநுஸந்திக்கும் படிக்கும் நியமித்தருள, அத்திரளுக்கு மங்களாஶாஸநமாய் ''வாழி யணிதூப்புல்'' என்கிற பாட்டை ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர சீயரும் அருளிச் செய்ய, பின்பு ''மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னு

ளால்'' என்கிறபடியே அந்த புரட்டாசித் திருவோணத் திருநாளின் பெருமையை நயினராசார்யரும் ''வாதாசன வரரிவரென வரும் மாபாஷ்யம் வகை பெருநாள்'' என்கிற பாட்டால் அருளிச் செய்ய, வெண்ணெய்க் கூத்த சீயரும் ''செங்கமலத் தயனன்னவனென்று புகழ்ந்து மகிழ்ந்திடு நாள்'' என்கிற பாட்டை அருளிச் செய்ய, அங்குள்ளவர்களும் அத்தை உகந்து, ''இம் மூன்று பாட்டுக்களை சாழித்திருநாமம் முடிவில் அநுஸந்தித்தால் அது ஒக்கும்'' என்று விண்ணப்பஞ் செய்ய, அவர்களும் அப்படியே திருவுள்ளம் பற்றி, அங்கங்குள்ளவர்களுக்கும் அப்படி அநுஸந்திக்கும்படி நியமித்தருளினார்கள்.

பின்பு நயினராசார்யரும் முதலிகளுடனே வட தேசத்தில் எம்பெருமான்களைத் திருவடி தொழுது, அங்குள்ள குந்நஷ்டிகளை ஆயிக்கத் திருவுள்ளமாய்த் திருவஹீந்த்ரபுரத்தில் எழுந்தருளி செங்கமல நாச்சியாரையும் தெய்வநாயகனையும் திருவடி தொழுது, திருமலையில் பெரியதிருவடி நயினாரும் ஸ்ரீ ஹயக்ரீவரும் தேசிகனுக்கு விசேஷகடாக்ஷம் செய்தருளின இடத்தில் ஸ்ரீ ஹயக்ரீவ ப்ரதிஷ்டையும் பண்ணிவைத்து,

''அபாஸ்ய து தம: பும்ஸா மநபாய ப்ரபாந்வித: |
அஹீந்த்ரநகரே நித்ய முதிதோய மஹஸ்கர: ||''

என்னும்படி ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற தெய்வநாயகன் ஸந்நிதியில் தேசிகப் பிரதிஷ்டையும் செய்து வைத்து, திருக்கோவலூர் ஸ்ரீமதுராந்தகம் எம்பெருமான்களையும் திருவடி தொழுது, பெருமாள் கோயிலேற எழுந்தருள, திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும் அநந்த கொத்து பரிஜநங்களோடே திருமாலை முதலான வரிசைகளையும் எதிர்கொண்டு வந்து ப்ரஸாதிப்பிக்க, நயினராசார்யரும் அவைகளைப் பெற்றுப் பெருந்தேவியாரையும் பேரருளாளனையும் திருவடி தொழுது நிற்க, பேரருளாளனும் ''நாம் காட்டின ஸ்வப்நம் பலித்தது'' என்று பேரஉகந்தருளி வரிசைகளையும் ப்ரஸாதிக்க, நயினராசார்யரும் அவைகளைப்பெற்று க்ருதார்த்தராய்த் திருமாளிகையி லெழுந்தருளித் திருத்தண்கா விளக்கொளி யெம்பெருமான் ஸந்நிதி முன்பே, தம் திருமாளிகைக்கருகே, ஒரு ஸந்நிதி உண்டாக்கித் தேசிகனைத் திருப்ரதிஷ்டை செய்துவைத்து ஆராதித்துக்கொண்டு வரும்போது, பேரருளாளன் திருவைபவகோத்



திருவஹீந்திரபுரம் ஔஷத கிரியில் ஸேவைதரும்
**ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர்**
(ஸ்ரீ கருத்மான், ஸ்ரீவேணுகோபால மூர்த்திகளுடன்)
ஸ்ரீதேசிகனுக்கு ஸ்ரீஹயக்ரீவர் ப்ரத்யக்ஷமான இடத்தில்
நயினாராசார்யரால் ப்ரதிஷ்டை செய்விக்கப்பட்டவர்.

---

ஸவத்தில் சில குமதிகள் வந்து "கச்சித்திருவீதியில் ப்ரபந்தாநுஸந்தாநத்தைச் செய்யக்கூடாது" என்று நிர்ப்பந்திக்க, அப்போது அவர்களை ஶாஸ்த்ரங்களாலும் ந்யாயங்களாலும் நிரஸித்து ப்ரபந்தங்களைக் கச்சி திருவீதியில் அநுஸந்திக்கும்படி இரண்டா முத்ஸவத்தன்று நிர்வஹிக்க, பின்பு பெரியதிருவடிநயினர் மேலே ஏறி யருளிவருகிற பேரருளாளரும் "நம் தூப்புல் நயினருக்கு அருளிப்பாடு" என்று அர்ச்சகமுகேந திருவாய் மலர்ந்தருளி ஸ்ரீ ஶடகோபனையும் ப்ரஸாதிக்க, நயினராசார்யரும் "கும்பரமென்றிரங்கி" என்கிற பாட்டின்படியே "நம் தேசிகன் வைபவம் அன்றோ இது?" என்று தேசிகன் ஸந்நிதியில் பரதந்த்ரராய் நிற்க, பேரருளாளரும் அவைகளை அர்ச்சையாக எழுந்தருளியிருக்கிற நம் தேசிகனுக்கு